உ

# அருள் ஒளி



தலைவாசல் கோபுர
கும்பாபிஷேக சிறப்பு மலர்

இதழ் 162

பங்குனி 2022

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு தென்திசைக் கோபுரம், குபேரவாசற் கோபுரம், மேற்றிசைக் கோபுரம், தலைவாசற் கோபுரம் ஆகிய நான்கு கோபுரங்களையும் சிறப்பாக விரைவாகவும் நிர்மாணித்த

**ஸ்தபதி. திரு. கலியப்பெருமாள் புருஷோத்தமன் அவர்கள்**

சகல செல்வ யோக வாழ்வு பெற வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. ப. சேயோன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

T.P : 021 321 3151, 021 224 1909

e.mail: thurkaiammantemple@gmail.com
face book: @tellidurga

பங்குனி - 2022 மாதமலர்

பதிவு இல: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

## தெல்லிமா நகரில் தலைவாசல் கோபுரம்

தெல்லிப்பழைத் திருநகர் துர்க்காதேவி தேவஸ்தானத்தால் பெருமைபெற்று விளங்குவதை யாவரும் அறிவர். துர்க்காபுரம் என அழைக்கப்படும் ஆலயச்சூழல் துர்க்கா நகரமாக இன்று எழுச்சி பெற்றுவிட்டது. இந்நிலையில் ஆலய முன்றலில் பெருந்தெருக்கரையில் இந்தியத் திருத்தலங்களில் உள்ளதுபோல் தலைவாசல் கோபுரம் அமைக்கப்பட்டு 23.03.2022 புதன்கிழமையன்று கும்பாபிஷேகம் நடைபெறுவது பெருமைக்குரிய விடயமாகும்.

அன்று தென்னாட்டில் தமிழ் வேந்தர்கள் தங்கள் அரண்மனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது ஆலயங்களின் கோபுரங்களை அற்புதமாக கட்டியெழுப்பினார்கள். கோபுரங்கள் பக்தி எழுச்சியை ஏற்படுத்துவதோடு எமது கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், பாதுகாத்து வருவதையாவரும் அறிவர். இந்தியா சுதந்திரமடைந்த பின் தனது இலச்சினையில் கோபுரத்தையும் காட்சிப்படுத்தியது. பாரத பூமியின் மேன்மைக்கு பண்டைய கோபுரங்களே சான்றாதாரங்களாக துலங்குகின்றன.

எம் மண்ணில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன் தென்னாட்டில் உள்ளது போல் பெருங்கோபுரங்களோடு ஈழத்துக் கோயில்கள் சிறப்புப் பெற்றிருந்ததனை வரலாற்றாளர்கள் தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர். பஞ்ச ஈஸ்வரங்களும், பஞ்ச கோபுரங்களோடு விளங்கியதாக வரலாறு. சோழமன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் அன்று எழுப்பிய பெருங்கோயில்கள் அன்னியரால் அழிக்கப்பட்டன. நாவலர் பெருமானின் எழுச்சியால் அழிந்து போன பல கோயில்கள் மீண்டும் 19ம் நூற்றாண்டு முதல் இன்றுவரை எழுச்சி பெறுகின்றன. இந்நிலையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு திசைகளிலும் அழகான கோபுரங்கள் கட்டப்பட்டு பெருங்கோயிலாக இன்று மிளிர்கின்றது. ஐந்தாவது கோபுரமாக மதுரை, திருச்செந்தூர், திருவண்ணாமலை போன்ற இடங்களில் உள்ளது போல் தூரத்திலேயே தலைவாசல் கோபுரம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு பங்குனி மாதம் சுபவேளையில் (02.04.2021) அடிக்கல் நாட்டப்பட்டு 2022 பங்குனி மாதம் 23ம் திகதி தலைவாசல் கோபுர கும்பாபிஷேகம் காண்பது துர்க்கையம்பாளின் திருவருளே. கொடிய கொரோனா நோய்ச்சூழலிலும், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தங்கள் திருப்பணிகளை நிறுத்தாது அடியவர்களின் பேராதரவினால் இப்பாரிய பணியை நிறைவேற்றியுள்ளது. பஞ்ச கோபுரங்களோடு இலங்கையில் ஓர் அம்மன் கோயில் காட்சி தருகிறது. என்ற பெருமை துர்க்கையம்மன் ஆலயத்தைச் சாரும். மதுரை மீனாட்சியம்மன் கோயில் போல் எதிர் காலத்தில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மிளிரும் என்பதில் ஐயமில்லை. **'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'** காங்கேசன்துறைப் பெருந் தெரவில் 87அடி உயரமான துர்க்கையம்மனின் தலைவாசல் கோபுரம் எழுந்து நிற்பது சைவத்தமிழர்களிடையே ஓர் புதிய எழுச்சியை ஏற்படுத்தும் என்பது உண்மை. எல்லாப் புகழும் துர்க்கையம்பாளுக்கே.

திருச்சிற்றம்பலம்

**கொண்டல்சேர் கோபுரங் கோலமார் மாளிகை**
**கண்டலுங் கைதையுங் கமலமார் வாவியும்**
**வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்**
**செண்டுசேர் விடையினான் றிருந்தடி பணிமினே.**

திருச்சிற்றம்பலம் - மூன்றாம் திருமுறை


**உ**

**அம்பாள் துணை**


# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# தலைவாசற் கோபுரத் திருப்பணி

ஸ்ரீ துர்க்கை அம்பாளின் தலைவாசற் கோபுரத்
திருப்பணிக்கான அன்பளிப்புக்களை
பின்வரும் வங்கிக் கணக்கின் மூலம்
செலுத்தலாம். அல்லது தேவஸ்தான
அலுவலகத்தில் நேரடியாக வழங்கி
பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

**இலங்கை வங்கி, சுன்னாகம்.**

**கணக்கு இலக்கம்: 77683985**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவாசல் கோபுர சிறப்பு மலருக்கான
# ஆசிச் செய்தி

**'விளக்கேற்றுவோம் உந்தன் வீதியிலே**
**துர்க்கை அம்மன் விதி மாற்றுவாள்'**

எம்மை வாழ வைக்கும் துர்க்கையம்பாளின் திருவடிகளை போற்றுகின்றேன். அம்பாளின் பேரருளை சொல்லி முடிக்க இயலாது. சிறியேன் ஏதும் அறியேன் தாயின் பேரருளை உணர்கிறேன். எந்தத் திருப்பணியை கற்பனையில் சுமந்தாலும் அதனை நியாயமாக்கும் அம்பாளின் அதிசயத்தை சொல்லால் சொல்லி முடிக்க இயலாது அம்பாளின் திருத்தலத்தில் பஞ்ச கோபுரங்கள் காட்சியளிக்கின்றது. பக்தர்களின் காணிக்கையினால் இத்திருப்பணிகள் அனுகூலமாகின்றது.

07.04.1981 அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் தலைமையில் முதலாவது இராஜகோபுரம் மிகவும் சிறப்பாக கட்டப்பட்டது. சிறியேனது தலைமைத்துவத்தில் நிர்வாகசபை, தர்மகத்தா சபை அனைவரது பூரண ஆதரவோடு ஆலய வீதிகளில் தென்திசைக்கோபுரம் 09.02.2017 இலும் வடதிசை குபேர வாயில் கோபுரம் 28.01.2018 இலும் மேற்திசை கோபுரம் 30.01.2019 இலும் கட்டிமுடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவுபெற்றது. 02.04.2021 அம்பாளின் அருளால் தலைவாசல் கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டினோம். ஏற்கனவே 3 கோபுரங்களைக் கட்டிய தென்இந்திய சிற்பாசாரி. திரு. கலிகைப்பெருமாள் புருசோத்தமன் கோபுர நிர்மாணப்பணியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பலர் கட்டடப் பொருட்களைத் தந்து திருப்பணியை உற்சாகப்படுத்தினர். எங்கள் தேவஸ்தான நிர்வாகசபை உபதலைவர் தேசகீர்த்தி, லயன். ச. ஆறுமுகநாதன் அவர்கள் தனது சொந்த நிலத்தின் ஒரு பகுதியை கோபுர விஸ்தரிப்பிற்கு வழங்கினார். கடந்த ஒரு வருட காலமாக இப்பாரிய திருப்பணி வெற்றிகரமாக நடைபெற்றது. பிரதேச செயலர், வலிவடக்கு பிரதேச சபையினர், பெருந்தெருத் திணைக்கள அதிகாரிகள், இலங்கை மின்சார சபையினர் பரிபூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

தலைவாசல் கோபுரத் திருப்பணிக்கு தம்மாலான பங்களிப்புகளை வழங்கிய அனைத்து அடியவர்களும் தங்கள் தங்கள் குடும்பத்தவர்களோடு சீரோடும், சிறப்போடும் வாழ வேண்டும் என துர்க்கையம்பாளைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைக் கூறி அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர்,**
**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜகோபுரம்

சித்தாந்த சிகாமணி, வித்துவான்.
பொன். அ. கனகசபை அவர்கள்

**முகவுரை:**

திருக்கோயிற் கோபுரங்கள் சிவஞானத்தைப் பெருக்கிச் சிவநெறிச் சிறப்பினைப் பரப்புகின்றன. விண்ணை அளந்து காட்டி வினைமறைத்து வீடருளுகின்றன. திருக்கோபுரம் தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றுக்கு எடுத்துக்காட்டு முன்னோர் நமக்களித்த கலைப் பொக்கிஷமாகவும், கலைஞரின் அறிவுக் களஞ்சியமாகவும் அழகு செய்கின்றது. இப்படியன், இந் திறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட இயலாத இறைவனைக் கலைஞர் எண்ணத்திலிருத்தி, வண்ணத்திலும் சுண்ணத்திலும் வடித்துக் காட்டியுள்ளனர். கோபுரங்கள் தெய்வங் கொள்கையையும், கலைஞானத்தையுங் கட்டிக்காக்கின்றன. கல்லைக் கலையுருவான கடவுளாகக் காட்டுகின்றன. கோபுரக்கல்லுங் கவி சொல்லும். சொல்லாலமைந்த காவியம் போன்று, (சுதைச் சிற்பங்களும் பலநிறச் சித்திர வேலைப்பாடுங் கொண்ட) திருக்கோபுரம், கல்லாலமைந்த காவிய - மன்றோ! ஆலயக் கோபுரம் அழகின் ஏற்றத்தையும், எடுப்பான தோற்றத்தையுங் கோயிலுக்கு கொடுக்கின்றது, அன்றியும் குறைவில்லா நிறைவான கோயிலாக்வத்குவதும் திருக்கோபுரமே, பொருளும் பொன்னும் போகமும் நிலையற்றன என அனுபவத்திற்கண்டு. அருளையும் அன்பையும் அறத்தையும் ஆண்டவனிடம் வேண்டிப் பெற்ற தமிழ்ப் பெருங்குடி மக்களின் அறவாழ்வைத் திருக்கோபுரம் காட்டித் திகழ்கின்றது. ஆலயக் கோபுரம் அமைத்தல், பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணி, கலை வளர்க்கும் திருத்தொண்டு: உலகியலையும் அருளியலையும் ஒன்றாயிணைக்கும் உத்தம இறைபணி. இவ்வாறு அருள்நெறிக்கு மக்களை ஆற்றுப்படுத்தும் சாதனமாக ஆலயக் கோபுரம் அமைத்திருக்கின்றது.

**வரலாறு:**

திருக்கோயில் அமைப்பில் கோபுரம் சிறந்த அங்கமாகும். கோபுரம் இல்லாத கோயில் குறைபாடுள்ள கோயிலாகக் கணிக்கப்படும். கோயில்களை வகைப்படுத்துவதிலும் கோபுரம் பெரும்பங்கு வகிக்கின்றது. கோபுர வரலாறு தமிழ் அரசியல் வரலாறாக அமைந்திருக்கின்றது. ஆரம்பத்தில் அரசர்களே கோபுரங்களை அமைத்தார்கள். அவர்களிடமே அக்கோபுரங்களை அமைப்பதற்கேற்ற இடம், பொருள், ஏவல்கள் வளமாக வாய்த்திருந்தன. பல்லவ மன்னரும், சோழரும், பாண்டியரும் விஜயநகரவேந்தரும், நாயக்கமன்னரும் கோபுரக் கட்டிடக் கலையை வரன்முறையே வளர்த்து வந்தார்கள். கி.பி. 7 ஆம் நூற்றண்டு முதல் ஒன்பது நூற்றண்டு காலமாகப் பல்லவர், கோபுர கலையை வளர்த்தனர். ஆதியில் மரம், செங்கல், சுண்ணாம்பு என்பவற்றலேதான் கோயிகளும் கோபுரங்களும் அமைக்கப்பெற்றன. கற்களைக் கொண்டு அவற்றை அமைக்கும் முறை பிற்காலத்திலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழப் பெருமன்னர் எடுத்த திருக்கோயில்களிற் போற்றத்தக்க ஒரு பெரும் பகுதி திருக்கோபுரங்களேயாகும். சோழ அரசர் காலத்தில் மூலத்தான விமானததிலும் பார்க்க கோபுரங்கள் முதன்மை பெற்றிருந்தன. கி.பி. 12 ஆம் நூற்முண்டில் சோழ மன்னர் கோபுரங்களை உயர் கோபுரங்களாக அமைத்தனர். அக்கோபுரங்கள் முற்காலத்துக் கோபுரங்களைப் பார்க்கிலும் உயரமாயிருப்பினும், கருப்பக்கிருக விமானத்திலுஞ் சிறியனவே. கி.பி. 13 ஆம் நூற்றண்டின் பிற்பகுதியில் பாண்டிய அரசர் பேராதிக்கம் பெற்று மூலதான விமானத்திலும் உயர்வாக கோபுரங்களைக் கட்டினர். கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் விஜயநகரவேந்தர் ஆட்சியில், கோயிற் கோபுர வளர்ச்சி உச்ச நிலையை எய்திற்று. மூன்று நிலைமாடங்கள் முதல் பதினொரு நிலைமாடங்கள் வரை மாபெருங் கோபுரங்கள் பலவற்றை அமைத்தனர். **கோயிற் கோபுரத்தின் உச்சியில் இரண்டு பக்கங்களிலுமுள்ள யாளிமுக வேலைப்பாடு இவ் விஜயநகரவேந்தர் காலத்திலேயே உண்டாயிற்று.** தென்னாட்டின் கலைச்செல்வங்களிற் பல நாயக்க மன்னராட்சியிலேயே ஆக்கப்பெற்றன. இவ்வாறு தமிழர் பாணி கோபுரக் கட்டிடக்கலை மகோன்னத நிலையை அடைந்திருந்தது. முகமதியமன்னரும் மேலைநாட்டவரும் தமிழக ஆட்சியைக் கைப்பற்றவே கோபுரக்கலையும் ஆதரிப்பாரற்று அழிவுநிலை எய்திற்று.

**கோபுரம்:**

திருக்கோயிலின் நேர்வாசலிலேயே முதலாவது திருக்கோபுரம் கட்டப்படுவது வழக்கம். இக்கோபுரத்தோடு ஏனை மூன்று பக்கங்களிலும் நடுயிலும் கட்டப்படும் நான்கு கோபுரங்களையுஞ் சேர்த்து ஐந்தினையும் **'பஞ்சகோபுரம்'** என அழைப்பர். ஐந்து வீதிகள் தோறும் நேர்வாசலில் கோபுரம் அமைக்கப்படும். அவ்வாறு ஐந்தாவது வீதி நேர்வாசலில் அமைவதே இராஜ கோபுரமாகும். இதுவே ஆரம்பத்தில் அமைத்த முதற் கோபுரமுமாகும். ஏனைய கோபுரங்களுக் கெல்லாம் தலையாயதாய் விளங்குவதால் இதை மகாகோபுரம், இராஜகோபுரம், மகாமர்யாதை என்ற பல்வேறு பெயரிட்டு அழைப்பர். சிவாலயத்தில் உள்ள ஐந்து பிராகாரங்களான பஞ்ச சபைகளில், இராஜசபையாகிய பிராகாரத்தில் இது அமைந்திருக்கும்.

கருப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள, அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக்கோபுரம் அமைய வேண்டுமென்பது சிவாகமவிதி. ஆலயக் கோபுரம் அமைப்பதற்குத், தெய்வத்தன்மை வாய்ந்ததும் உன்னதமானதும் ஆன தமிழர்பாணி அல்லது திராவிடர் பாணி கட்டிடக் கலையே மூலாதாரமாகும். திராவிடபாணியிலமைந்த சிற்பக்கலையும், ஓவியக்கலையும் ஆலயக் கோபுரத்தை அழகு படுத்துமுகமாகப் பிற்காலத்திற் சேர்க்கப்பட்ட துணைக்கலைகளாகும். திருக்கோபுரங்கள் இருவகை அமைப்பிலே திகழுகின்றன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை, அம்மூலைக் கோணங்கள் நேர்கோட்டிலமையாது உள்ளே வளைந்து காணப்படுவது இன்னொரு வகை, அடிவாரம் அகன்று உள்ள கோபுரம் மேல்நோக்கி நாற்புறமும் ஒடுங்கிச் சென்று சென்று தேய்ந்து விண்ணுருவாகின்றது. முன்பக்கமும் பின்பக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளத்தாற் கூடியும். ஏனைய இருபக்கங்களும் அகலத்தாற் குறைந்தும் இருக்கும். திருக்கோவில் உள்ள ஊரின் செல்வ வளத்திற்கேற்பவே திருக்கோபுரம் பெரிதாகவோ அன்றிச்சிறிதாகவோ அமைந்திருக்கும். காட்சிக்கு எளிதாயும். கட்டிடம் வலியதாயும் கலையழகுடையதாகவும் அமையுங்கோபுரம் காலத்தை வென்று நிற்கும். திருக்கோபுரங்கள் ஒவ்வொன்றும் 1, 3, 5, 7, 9, 11 என்ற பல்வேறு எண்ணிக்கை கொண்ட நிலைமாடங்களை உடையதாயிருக்கும் ஒவ்வொரு மாடியும் வெளித்தோற்றத்தில் நானாதிசையிலும் நன்கு தெரியக் கூடியதாக முன் பின்பக்கங்கள் திறந்தபடியே யாளி வரிசைகளுடன் அமைந்திருக்கும். திருக்கோபுர உச்சியிலே தாபிக்கப் பெறுங்கலசங்கள் 3,5,7,9 என்ற எண்ணிக்கை கொண்டிலங்கும்.

கோபுர அழகை ஏற்றமுற எடுத்துக்காட்டுவன சிற்ப வடிவங்களாகும். அவை கடவுளின் பெருமைகளையும், கணக்கற்ற திருவிளையாடல்களையும் விளக்கும். திருமால் பிரமனாதிதேவர், அட்டதிக்குப் பாலகர், சூரிய சந்திரர் முதலியோரது உருவங்களும் காமதேனு, கற்பகதருக்களும் அதில் காணப்படும். திருக்கோயியின் வரலாற்றுச் சிற்பங்களும் அமைந்து திருக்கோபுரத்தைச் சுய வரலாற்றுச் சுவடியாக்கும்.

**மெய்ப் பொருள்:**

அண்டசராசரங்கள் அனைத்தையுந் தன்னகத்தே கொண்ட ஓர் அமைப்பே கோபுரமாகும். உயிர்களும் உலகங்களும் ஒடுங்குதற்கும் தோன்றுதற்குமான இடம் லிங்கம் என்பதைத் தூலமாகக் காட்டும். ஆண்டவன் வியாபகத்துள் பிரபஞ்சமடக்கம் என்ற உண்மையையுங் காட்டுகின்றது. "எவ்வடிவுகளும் தானாம்" எம்பெருமானது திருவருவமே திருக்கோபுரம் (கோ - முதல்வன், புரம் - உருவம்) அது சதாசிவ ரூபம். பேசும் பொற்சித்திரங்களும், பதுமைகளும், கோபுரமும், கோபுர வாசற் கொடியும் உலகியலில் வாழும் மக்களை அருளியலுக்கு ஆற்றுப்படுத்துகின்றன. கோபுரவாசற் கொடி, "மிண்டுமனத்தவர் போமின்கள்" மெய்யடியார்கள் விரைந்து "வம்மின்" என்று அறைகூவி அழைத்து ஆட்கொள்ளுகின்றது. குருவின் அறிகுறியாகக் கொடி நின்று, அண்மையில் வருவோருக்கு என்னும் முப்பொருளை உபதேசிக்கின்றது. அதைக்கேட்ட உலகியலார் பசு, பதி, பாசம் என்னும் முப்பொருளும் சிவம், சக்தி, ஆன்மா, திரோதை, மலம் என ஐந்து முதலாவது ஏது? எனப் புறச் சமய விரோதவினா எழுப்புகின்றனர். சிகராதி பஞ்சாக்கிர உபதேச முகத்தால் பாச நீக்கம் செய்து, சுத்தமாக்கி பதியோடு சேர்த்து, அத்துவிதமாக ஏகமாக்கும் என விடையிறுத்துச் சைவத்தாபனம் செய்து நிற்கின்றது. கொடிக்கவி, "பொருளாம் பொருளேது?" என்ற இரண்டாம் வெண்பாவால் இதனை விளக்குகின்றது. திருவண்ணாமலை திருக்கோபுர வடபாசிரத்தேயிருந்து கந்தகுரு வந்து அருணகிரியை ஆட்கொண்டார் என்று வரலாறு கூறுகின்றது. சிற்பநூல் முறையால் அழகுபெற்று விளங்கும் ஆலயக் கோபுரம் குடமுழுக்காட்டலால் வழிபாட்டுக்குரிய தூலலிங்கம் ஆகின்றது. நிலைமாடங்கள், சக்தி பீடங்களாகத் தூலலிங்கத்துள் அடங்கியிருக்கின்றன. பதுமைகள் சங்கமங்களாக நின்று இறையருளை வெளியிடுகின்றன. இவ்வாறு குருலிங்க சங்கமமாய் ஆண்டவன் நின்று அருள்புரியுமாற்றை ஆலயக் கோபுரத்தே கண்குளிரக் கண்டு களிக்கலாம். "வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுரவாசல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருமந்திரமும் இதனை இன்னொரு வகையால் எடுத்துச் செப்புகின்றது. "யான் எனது அற்றது அடி", "பார்ப்பதெல்லாம் சிவமாய்த் தோன்றுவது முகம்", "உரையிறந்த சுகம் முடி" என்று ஞானக்கண் கொண்டு பார்ப்பவர்க்கு கோபுர தரிசனமே சிவதரிசனமுமாகும்.

**முடிவுரை:**

ஊருக்குப் புதிதாக வரும் ஒருவர் நெடுந்தாரத்தில் நின்று பார்க்கும் போதே அவ்வூரில் கோயில் இருப்பதைக் கோபுரம் அறிவிக்கின்றது. எத்திசைகளிலும் பார்வைக்கு எட்டிய தூரத்தே நின்று பார்த்து வணங்குவோருக்கும் கோபுரம் தரிசனங்கொடுத்து அருள்புரிகின்றது. திருக்கோபுரம் இறைவனுடைய சானித்திய சின்னமாகவும், அருட்கருவியாகவும் விளங்குகின்றது. ஆண்டவனின் அருளை வெளிப்படுத்தும் தத்துவங்களையுந் திருக்கோபுர அமைப்பிலேயே ஆக்கியுள்ளனர். ஒழுக்கத்தாலுயர்ந்த உத்தமர்க்கே கோபுரத்தில் புதைந்திருக்கும் தத்துவங்கள் புலனாகும்.

திருக்கோபுர கும்பாபிஷேக தரிசனம், ஆன்ம கோடிகளின் மன அழுக்கை அகற்றிப் புனிதமாக்குகின்றது. அவர்களைச் சுத்த அருள்நிலையான துரியத்தானத் தியானத்திற்கு அதிகாரிகளாக்குகின்றது. தூலலிங்கமான கோபுர தரிசனம் மூலத்தான சூக்கமலிங்கத்தைத் தியானிக்க செய்கிறது. அதிதீவிர பக்குவராக்கி பாவச் செயல்களிலிருந்து படிப்படியாக விடுவித்து பாசநீக்கஞ் செய்கின்றது. "மலமாயை தன்னொடு வல்வினை" இலவாகின்றன. இதனாலேதான், கோபுரதரிசனம் பாவவிமோசனம் என்பர் கோபுர தரிசனம் அவரது புண்ணியத்தை வளர்த்துக் கோடி சிவ புண்ணியமாக்கி விடுகிறது. "அயரா அன்பின் அரன்கழல்" சேர்த்துத் துரியாதீத ஆனந்தமளிக்கின்றது. ஆன்மலாபமாகிய பாசவீடு, திருவடிப்பேறு என்னும் இருவகைப்பயன்களையும் திருக்கோபுர தரிசனம் ஒன்றே தருகின்றது. கலைஞான சரஸ்வதி பீடமான கோயிற் கோபுரத்தை நாமும் வாழ்த்தி வணங்கிப் பிறவிப்பேற்றை பெற்று உய்வோமாக!

**வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்**
**சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து**
**சிந்தை ஆர்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல**
**அந்தி நாண்மதி அணிந்தவர் கோயிலுள் அடைந்தார்**

அத்திருப்பதிக்கு அணுக வந்தருளிய பிள்ளையார், கோபுரவாயில் தொலைவிலே தோன்றிய அளவில், அழகிய முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கி நிலத்தில் விழுந்து பருவடி வாக விளங்கும் இலிங்கத்-திருமேனியாகிய அக்கோபுரத்தை வணங்கி எழுந்து, உள்ளத்தில் எழுந்த ஆசையும் மகிழ்ச்சியும் மேலும் மேலும் பொங்கித் தமக்கு முன் செல்ல, மாலைக் காலத்தில் தோன்றும் பிறைச் சந்திரனைச் சூடிய திருவரத்துறை இறைவரின் திருக்கோயிலின் உள் அடைந்தனர்.

**- பன்னிரண்டாம் திருமுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம் உணர்த்தும் தத்துவம்

திரு . மா . பொ . செல்வரத்தினம்
முன்னாள் தொல்பொருட்கலை உத்தியோகஸ்தர்,
(இலங்கைத் தொல்பொருட்கலைத் திணைக்களம்)

திருக்கோயில்கள் பரம்பொருளுக்கு எடுக்கப்பட்ட திவ்யத்தலங்களாகும். இப்பரம்பொருளைக் குறிப்பொருள் மூலம் வழிபட்டுத் தியான பாவனையினாலே அடைய மக்கள் முற்பட்டனர். தெய்வங்கள் எங்கள் உலகைச் சார்ந்தவை அல்லவென்றும் திருக்கைலாயம், ஸ்ரீ வைகுண்டம் ஆதிய பாரிய குன்றுகளிலிருந்து திருவிளையாடல் புரிகின்றன என்றுங் கருதப்பட்டது. கோயில்களில் பிரதிஷ்டை பண்ணப்பட்ட திருவுருவங்களில் ஏதாவது ஒரு தெய்வாம்சம் அமைகிறமையின் வானுலகும் மண்ணுலகும் பிணைக்கப்படுகிறதென்று கொள்ளப்பட்டது. எவ்வளவோ முன்னேற்றமான விஞ்ஞான இக்காலத்திலும் எங்களுடைய செயல்களையும் ஊக்கங்களையும் ஏதோ ஒரு சக்தி நடாத்திச் செல்கின்றதென உணர்கிறோம். இந்துக்கள் கோயில்களை சதுர வடிவிற் கண்டது ஒரு உளப் பண்பாட்டின் தொடர்பாலேயாகும். கோயில் கட்டடத்தில் வட்ட வடிவமும், சதுர வடிவமும் சேர்ந்ததும், வட்ட வடிவும் நீள் சதுர வடிவு பெற்றதும் தற்செயலான நிகழ்ச்சியாகாது. சூரிய சந்திரரும், விண்மீன்களும் பார்வைக்கு அமைந்தது வட்ட வடிவிலேதான் என்பது பிரத்தியட்சம் பிரமாணமாகும். இவை விண்ணுலகில் குறிப்பொருளாக மதிக்கப்படுகின்றன. பூமியோவெனில், நாற்றிசையால் மருவியதில் சதுரவடிவானது. வானுலகும் மண்ணுலகும் இந்துக் கோயில்களில் சந்தித்த தன்மையைக் காட்டுவதற்காக இரு வேறான வட்ட வடிவும், சதுர வடிவும் இந்துக்கோயில்களில் ஒன்றானதென ஆராய்ச்சியாளர் கூறுவர். தெய்வ உருவங்கள் சதுரவடிவமைந்த கட்டடத்தில் தாபிக்கப்பட்டு அதன் மேல் வட்டவடிவில் வளைமாடம், கவிந்திருப்பதை எந்த இந்துக்கோயில் கட்டடத்திலுங் காணலாம். இக்கோயில்களில் நடைபெறும் திவ்விய கிரியைகளில் குருமார் ஒவ்வொரு மண்டபத்தையுங் கடந்து மூலஸ்தானத்தையடைந்து பூசை வழிபாடுகளை நடாத்துதலில் விண்ணுலகம் மண்ணுலகம் இரண்டையும் இணைத்துப் பாலம் போல் விளங்குவர். மண்ணுலகத்தின் மேல் விண்ணுலகம் இருப்பது போன்று வானத்தைக் குறிக்கும் வட்டவடிவமான வளைமாடம் பூமியைக் குறிக்கும். சதுரக் கட்டடத்தின் மேல் அமைந்திருப்பதையே கோயில் குறிக்கிறதென்பர். தத்துவ நூல் வல்லார். இக்கருத்தை விளக்கவே சிற்ப விற்பன்னர்கள் சதுரக் கட்டுமானத்தில் வட்ட வளைமாடம் அமைத்தனர் போலும் என்று ஸ்றெல்லா கிறாம்றிஸ் என்ற மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் கூறினர்.

விண்ணுலகையும் மண்ணுலகையும் பிணைக்குந் தத்துவத்தை இயற்கையின் மலைகளே குறிப்பொருளாக விளக்குகின்றன. இக்காரணத்தாலே மலைகள் இந்து மதத்தில் மிகமேலான இடம் பெறுகின்றன. அதனாலே மேருமலை உலகின் அச்சாணியென்றும், திருக்கையிலாயம் தெய்வங்களின் இருப்பிடமென்றும் கொள்ளப்படுகின்றன. இக்கருத்தையே மலைக்கற்பாறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கின்றன. இம்மலைக்கற்பாறையின் கற்கள் தகுந்த உருப்பெற்று உகந்த இடங்களில் தாபிக்கப்பட்டதும், சுயம்புலிங்கம் என வழங்கப்பட்டன. சிற்சில சமயங்களில் மலைக் கற்பாறைகள் ஏற்றமாதிரிக் கற்கள் செதுக்கப்பட்டுக் கோயில்களாக அமைக்கப்பட்டன. இவ்வகைக்கு உதாரணங்களாக வட இந்திய புவனேஸ்வரர் கோயிலும், லிங்கராசர் கோயிலும் விளங்குகின்றன. தென்னிந்தியாவில் திருவடிக்கோணம் என்னும் கோயிலின் செய்குன்றம் போன்ற கோபுரம் தெய்வங்களின் மலை இருப்பிடக்கருத்தையே குறிக்கின்றது. திராவிடக் கோயிற் கட்டடக்காரருக்கு பல்வேறு அடுக்குகள் கொண்ட செய்குன்று போன்ற கட்டுமானம் தெய்வங்களின் இருப்பிடமான புண்ணிய கைலாயமாகும். தஞ்சைப் பிருகதீஸ்வரர் கோயிலின் பல்வேறு அடுக்குகள் கொண்ட பிரமாண்டமான கோபுரத்தைத் தென்னாட்டு மேரு மலை என வழங்குவர். எல்லோரா மலையில் குடையப்பட்ட தனிக்கோயில்கள் திபெத் எல்லையில் கைலாயமலைக்கொண்ட சாயலை நிகர்த்ததென ஈ.பி. ஹேவல் என்ற மேல்நாட்டுக் கலைவல்லுனர் கூறினர்.

இந்துக் கோயில்களுக்கு ஆதி மூலமாகக் கர்ப்பக்கிருகம் அமைந்தது. கர்ப்பக்கிருகம் என்ற பெயரே அகில கோடி உயிர்களின் வாசஸ்தலமென்பதையே குறித்தது. ஆதலின் பிரமாண்டமான மலைக்குகைகளே கர்ப்பக்கிருகங்கள் எனக் கொள்ளப்பட்டன. இந்த இருண்ட இரகஸ்யமான குகைகளிலிருந்தே தெய்வீக சக்தி செறிகிறதென்று கருதப்பட்டமையின் மலைச்சாரலைச் சுற்றித் தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைந்தன. இக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் தெய்வங்கள் ஆதி மூர்த்தியாக விளங்குஞ் சிவலிங்கத்தின் பல்வேறு அம்சங்களேதான். பொதுவாகத் தெற்கில் விஷ்ணுவும், மேற்கில் சிவனும், வடக்கில் பிரமனுஞ் சித்தரிக்கப்பட்டுக் கிழக்கே வாயில் அமைந்தது. 8ம் நூற்றாண்டுக் கோயில்களில் தெட்சணாமூர்த்தி தெற்கு முகமாகவும், துர்க்கை வடக்கு முகமாகவும் காணப்பட்டன. வாயிலின் முன்புறத்தில் தெய்வங்களின் வாகனமாக நந்தி காட்சியளிக்கும் சிவன் பரமபதி. ஆன்மாக்கள் அல்லது பசுக்களுக்குக் குறிப்பொருளாக விளங்குவது நந்தியாகும். கோயிலைச் சுற்றி வழிபடும் அடியார்கள் கோயில் உள் பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளைச் சிந்தித்து வழிபாட்டை ஆதிமூலத்திற் செலுத்துவர். கோயில் கர்ப்பக்கிருகத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக மண்டபங்கள் அமைந்து கதவுகளுங் கொண்டு விளங்குகின்றன. ஒவ்வொரு கதவு நிலையைத் தாண்டி ஒவ்வொரு படி உயர்ந்து கர்ப்பக்கிருகத்தை அணுகுதல் ஆத்மீகப் படியில் உயர்ந்து கடவுளை அணுகுவதாக மதிக்கப்படுகின்றது.

கிராம புறங்களில், கிராம மக்களின் செல்வாக்குக்கு ஏற்ப சர்வசாதாரணமாக விளங்கிய கோயில்கள் காலாந்தரத்தில் விருத்தியடைந்து கூடகோபுரங்களும் அலங்கார மண்டபங்களுங் கொண்டன. இதே விருத்தியைக் கோயில் கோபுரங்களிலுங் காணக்கூடியதாயிருக்கிறது. கோபுரத்தின் ஒவ்வொரு அடுக்கிலும் ஒவ்வொரு வாயில் அமைத்துக் கோபுரத்தைக் கர்ப்பக்கிருகத்தோடு சேர்க்கும் வாயிலே பெருவாயிலாக விளங்குகின்றது. இதனையடுத்த வாயில்கள் படிப்படியாகக் குறைந்து கொண்டே போகும். கோயில் கோபுரமானது மலைபோல் உயர்ந்து வானத்தை அளாவி நின்று அதனுள் தெய்வசக்தி தாவிநின்று பொலிகிறது. கோயில் அமைந்த தன்மையினாலேயே விக்கிரகங்களும் எழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் அமைந்த கோயில்கள் விக்கிரகங்கள் இன்றிக் குறிப்பொருள்கள் கொண்டு விளங்கின. இக்குறிப் பொருள் பிரதானமாக சிவபிரானைக் குறித்த இலிங்கமேயாகும். தொடர்ந்த காலத்தில் திருவுருவங்கள், தெய்வசக்தியை அதாவது அபரிமிதமான பராக்கிரமத்தைப் புலப்படுத்தப் பல சிரங்களும், பல கரங்களும் கொண்டு தோற்றங் கொண்டன. சிருஷ்டி தத்துவத்தை விளக்க ஒரு கரத்தில் உடுக்கைத் தாங்கியும், அழித்தலை உணர்த்த இன்னொருகரத்தில் அக்கினியைக் கொண்டும் பிறகரங்கள் அபய வரத முத்திரையைக் காட்டியும், சிவனது நடராசத் திருக்கோலம் அமைக்கப்பட்டது. வேறு பௌராணிக வரலாற்றைக் குறிக்கவும், போர்க்கோலப் புனைவைக் காட்டவும் சில மூர்த்திகள் சங்கு, சக்கரம், மான், மழு முதலிய சின்னங்களைக் கொண்டன. சிற்சில காலங்களில் வேதகாலக் கொள்கைகள் வலியுற்றவிடத்தும், குறிப்பொருள் தத்துவம் மேலோங்கி வளர்ச்சியடைந்தது. கூடகோபுரங்களும், மண்டபங்களும், தூண்வரிசைகளும் எல்லாச் சிற்பவேலைப்பாடுகளும் கர்ப்பக்கிருகத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கின. இவ்வண்ணம் பல்லவர் கோயில்கள் அலங்காரம் பெற்றுள்ளன. ஆதித்தமிழரின் கோயில் கட்டடக் கலைப்பாணியின் தொடர்பை பல்லவ அரசன் மகேந்திரவர்மனால் திருச்சிராப்பள்ளியிலும், தாலவனூரிலும் (கி.பி .600 630) கட்டப்பட்ட கோயில்கள் புலப்படுத்துகின்றன. செங்கல், மரம், உலோகம், சாந்து ஆகியவையின்றி இவை கட்டப்பட்டதென்று சாசனங்கள் கூறுவதில் கோவில் கட்டடக் கலையடைந்திருந்த உன்னத நிலை வெளிப்படையாகின்றது. மகேந்திரவர்மனது புதல்வன் நரசிங்கவர்மன் (கி.பி 670 -715) காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோவிலைக் கல்லால் கட்டுவித்தான். கோயில் கட்டடக்கலை ஆதிபல்லவர் சின்னங்களிலிருந்து கி.பி.6 ம் நூற்றாண்டு தொடக்கம் விஜய நகர் வீழ்ச்சி வரை (கி.பி. 1600) மாற்றம் பெற்றது. மகாவலிபுரம், காஞ்சிபுரம், (கைலாசநாதர் கோயில்) திருச்சிராப்பள்ளி குடைக் கோயில்கள் கி.பி. 850 வரை கட்டப்பட்ட பிரதான கோயில்களாகும். ஆதி சோழர்காலக் கோயில்களின் விமானம் கோபுரத்தை விஞ்சிநின்றன. தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், திருப்புவனம் ஆகியவிடங்களிலுள்ள கோயில்கள் மிகச் சிறந்தவை. பிற்காலச் சோழர் (1100 - 1350) காலத்துக் கோயில்களில் விமானத்திலும் பார்க்கக் கோபுரம் மிக உயர்ந்தவை. இவற்றிற்கு உதாரணமாகத் திருவண்ணாமலை, சிதம்பரம் ஆகியவிடங்களிலுள்ள கோயில்களைக் கூறலாம். தற்காலம் கி.பி. 1600 தொடக்கத்துக் கோயில்கள் நீண்ட பிரகாரங்களுக்கும், கல்யாண மண்டபங்களுக்கும், கோபுரங்களின் கண்கவர் சிற்பலங்காரங்களுக்கும் ஒப்புயர்வற்றவை. இவ்வகைக் கோயில்களை இராமேஸ்வரம், மதுரை ஆகிய இடங்களில் காணலாம். இலங்கைக் கோயில்கள் இவற்றைப் பின்பற்றி எழுந்தன.

கோயில் இராசகோபுரக் கும்பாபிசேகத் தினத்தில் காடவர்கோன் இராசசிம்மன் (கி.பி. 680 - 710) காலத்துப் பூசலார் நாயனார் கோயில் கட்ட முற்பட்ட சம்பவம் நினைவு கூறற்பாலது. இராசசிம்மன் கைலாசநாதர் கோவிலைக் கட்டிக் கும்பாபிசேகம் செய்ய நாளும் குறித்திருந்தான். அதேகாலத்தில் சிவபிரானில் அபரிமிதமான பக்திகொண்டு சிவன் கோயில் கட்டுவதற்கு திருநின்றவூர் நான்மறையாளரில் ஒருவரான பூசலார் பொருள்தேடி அலைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிந்தார். கோயில் எப்படி அமையவேண்டும் என்று தியானித்து மனதினாற் கோயில் கட்டிச் சிவனை எழுந்தருளச் செய்வதற்கு நாளுங் குறித்திருந்தார்.

**'அன்றினார் புரமெரித்தார்க் காலய மெடுக்க வெண்ணி**
**யொன்றுமங் குதவாதாக வுணர்வினா லெடுக்குந் தன்மை'**

**'மடுப்பொதி வேணியையர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயி**
**லெடுப்பது மனத்துக் கொண்டா ரீருநிதியின்மை எண்ணார்'**

**'மனதினாற் கருதி யெங்கு மாநிதி வருந்தித்தேடி**
**யெனைத்துமோர் பொருட்பேறின்றி யென்செய்கே னென்றுநைவார்'**

**'வடிவுறுந் தொழில்கண் முற்ற மனதினால் வகுத்துமான**
**முடிவுறு சிகரத்தானு முன்னிய முழுத்திற் கொண்டு**
**நெடிதுநாள் கூடக்கோயி லிரம்பிட நினைவாற் செய்தார்'**

**'நீண்டசெஞ் சடையினார்க்கு நினைப்பினாற் கோயிலாக்கிப்**
**பூண்டவன் பிடையறாத பூசலார் பொற்றாள் போற்றி'**

என்று சேக்கிழார் சுவாமிகள் பூசலார் நாயனாரது மகிமையைப் புகழ்ந்து பாடுவாராயினார்.

பூசலார் நாயனார் சிவனை எழுந்தருளச் செய்தநாளும், காடவர்கோன் குறித்த நாளும் ஒரேநாளாக இருந்தமையால், நாயனாரின் பக்தி மேம்பாட்டைத் தவிர்க்க முடியாத கடவுள் இன்னொருநாள் குறிக்கும்படி அரசனுக்குக் கனவில் தோன்றி திருவாய் மலர்ந்தருளினார். இத்திருவிளையாடலை "வானொலி கேட்ட மன்னன்" என்று கல்வெட்டுக் கூறுகின்றது.

**நன்றி- அனலைதீவு எழுவடிபயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம் இராஜகோபுர கும்பாபிஷேகச் சிறப்புமலர் - 2012**

**கொம்பன்ன மின்னி னிடையாளொர் கூறன் விடைநாளு மேறு குழகன்**
**நம்பன்னெ மன்பன் மறைநாவன் வானின் மதியேறு சென்னி யரனூர்**
**அம்பன்ன வொண்க ணவரா டரங்கின் அணிகோ புரங்க ளழகார்**
**செம்பொன்ன செவ்வி தருமாட நீடு திருமுல்லை வாயி லிதுவே.**

பூங்கொம்பு போன்றவளும் மின்னல் போலும் இடையினளும் ஆகிய உமையம்மையை ஒரு கூற்றாகக் கொண்டவன். நாள்தோறும் விடைமீது ஏறிவரும் இளையோன். நம் மேல் அன்புடையோன். மறையோதும் நாவினன். வானில் செல்லும் மதி பொருந்திய சென்னியை உடைய அவ்வரனது ஊர், அம்பு போன்ற ஒளி பொருந்திய கண்ணினை உடைய குலமகளிர் ஆடும் அரங்குகளும், அழகிய கோபுரங்களும் உடையதாய்ச் செம் பொன் னின் அழகைத்தரும் மாடவீடுகள் கொண்ட திருமுல்லை வாயிலாகிய இத் தலமேயாகும்.

**- இரண்டாம் திருமுறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தரிசனம்

சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக்குருக்கள் B.A.,
அரியாலை.

இந்துசமயக் கலை மரபுகள் திருக்கோவில்களில் பெருமளவு வளர்ச்சியைக் கண்டுள்ளன. கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் எனப் பல்வேறு வடிவங்களில் கலையின் அம்சங்களைத் திருக்கோவில்களில் கண்டு நாம் மகிழ்கிறோம். திருக்கோவில்கள் வழிபாட்டிற்குரிய இடம் மாத்திரமன்றி கலைத்திறன்களை வளர்க்கும் பொது இடமாகவும் விளங்கிவருகின்றன. கோவில்களால் கலைகள் வளர்ந்ததாகவும், கலைகளால் கோவில்கள் வளர்ந்ததாகவும் ஒரு பொதுவான முடிவை நாம் ஏற்க முடியும். கோவில் வழிபாட்டிற்கு மிகவும் பிரதானமானது இறைவனின் திருவுருவங்களாகும். இத் திருவுருவங்களை அமைக்கும் கலை விக்கிரகக் கலை எனப்படும். இத்திருவுருவங்களை நிறுவுவதற்குத் தேவைப்படும் ஆலயத்தை அமைக்கும் கலை கட்டடக்கலை எனப்படும். கட்டிடக்கலையில் அதிகமான உயரத்தைப் பிடித்திருப்பது கோபுரம் கட்டும் கலையாகும். மூலாலயத்தில் உள்ள திருவுருவம் முதல் திருக்கோபுரம் வரையுள்ள அனைத்திடங்களும் கலை வடிவமாக இருப்பது தான் இந்துசமயத்தின் தனிச் சிறப்பாகும். கோயில்களில் நடைபெறும் கிரியைகள், அங்கு ஓதப்படும் வேதமந்திரங்கள், திருமுறைகள், முழங்கும் மங்களவாத்தியங்கள், மணியோசைகள் முதலிய யாவும் இசைக்கலை, நடனக்கலைக்கு ஆதாரமாக இருப்பவை என்பது தெளிவாகும். இவ்வாறு இறைவனும் கோவிலும் கலைவடிவமாக இருப்பதை உணரலாம். திருக்கோவிலில் காணப்படும் கட்டிடங்களும் மணிக்கூட்டுக் கோபுரம், விமானம், ராஜகோபுரம் என்பன உயரமானவையாகக் காணப்படும். இவற்றைவிட ஆலயத்தின் நடுவில் காணப்படும் கொடிமரமும் உயரமாக இருக்கும். எங்கும் பரவியுள்ள இறைவனின் திருவருளை ஆலயத்திற்குள் வரவழைக்கும் பணியில் இவ் உயர்ந்த கட்டிடங்களுக்கும் பெரும் பங்களிப்பு உண்டு.

இவ்வுயர்ந்த கட்டிடங்கள் வெறும் கட்டிடங்களாக மாத்திரம் காட்சியளிக்கப் பயன்படவில்லை. சமய வரலாறு, புராணக் கதைகள், தத்துவம் முதலிய பல செய்திகளை எடுத்துக் கூறும் உயிர்த் தன்மை கொண்ட உருவங்களாகவே உயர்ந்து நிற்கின்றன. இறைவனை நோக்கி எமது மனம் உயரவேண்டும். என்ற அரும்பெரும் தத்துவத்தைக் கோபுர தரிசனம் எடுத்துக்காட்டுகிறது. அடியில் அகலமாக இருந்து படிப்படியாக ஒடுங்கிக் கொண்டு போவது கோபுர அமைப்பில் காணப்படும் பொதுவான அம்சமாகும். அதிஉயரத்திலிருந்து விமானத்தையோ, கோபுரத்தையோ எவன் பார்த்தவுடன் வணங்குகிறானோ அவனுக்கு பாம்பானது தனது செட்டையிலிருந்து விடுபடுவதுபோல் சகல பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் எனச் சுப்பிரபேதாகமம் கூறுகிறது. எமது இரு கரங்களையும் தலைக்கு மேலாக வைத்து குவித்து வணங்கும்போது திருக்கோபுர அமைப்பிற்கு ஒத்ததாக அவ்வமைப்பு இருப்பதைப் பொதுவாகக் காணலாம். எமது சக்திக்கு மேற்பட்டவன் இறைவன் என்பதையும் அவனை அடைவதற்கு எமது புலன் ஒடுக்கம் அவசியம் என்பதையும் எடுத்துக் காட்டுவது திருக்கோபுர ஒடுக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆலயத்தின் கோபுரமும், விமானமும் எவ்வளவு தூரத்திற்குத் தெரிகிறதோ அவ்வளவு தூரமும் கைலாசப் பிரதேசம் எனப் போற்றப்படும். இதனால் தென்னாட்டில் பல மன்னர்கள் திருக்கோயில்களில் மிக உயர்ந்த கோபுரங்களைக் கட்டினார்கள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" "கோபுர தர்சனம் பாப விமோசனம்" போன்ற வசனங்கள் கோபுர தர்சனத்தால் எமது ஆன்மா பெறும் புனிதத் தன்மையைப் புலப்படுத்துகிறது. கோபுரத்தை கண்டவுடன் நிலத்தில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்ற செய்தியைப் பெரிய புராணப் பாடல்வரி ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகிறது.

**'நின்று கோபுரத்தை நிலமுறப்**
**பணிந்து நெடுந் திருவீதியை வணங்கி ....'**

எனவே கோபுரத்தை ஒவ்வொரு மனிதனும் கண்டு வணங்க வேண்டியது அவசியமாகும்.

கோவில் இல்லாத ஊர் அடவிகாடு என அப்பர் சுவாமிகள் எடுத்துரைத்தார். திருக்கோவில் இல்லாத ஊர் எவ்வளவு செல்வம் பொருந்திய ஊராக இருந்தாலும் திருவில் ஊரே எனவும் அப்பர் சுவாமிகள் மேலும் கூறினார். ஊருக்கு அழகு தருவது கோவில் ஆகும். கோவிலுக்கு அழகு தருவது கோபுரம் ஆகும். என்ற நிலையில் பல ஆலயங்களில் கோபுரம் அமைக்கும் பணி பரவி வருவதைக் காணலாம்.

**'...கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாகால்களாற் பயனென்'** எனவும் அப்பர் சுவாமிகள் கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறுகிறார். "கோலக் கோபுரம்" என அப்பர் சுவாமிகள் குறிப்பிடுவதிலிருந்து கலை அம்சம் பொருந்திய சிறப்பினை நாம் கோபுர தர்சனத்தில் காணலாம்.

கோபுரங்களில் 3, 5, 7, 9, 11 என்ற வகையில் மாடங்கள் இருக்கும். இதனால் கோபுரங்களை நெடுமாடம் எனவும் அழைக்கலாம். வானளாவிய உயர்ந்த மாடம் உடைய திருமருகல் தலத்தைப் பற்றிச் சம்பந்த சுவாமிகள் தமது திருமுறை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

**'... மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய**
**மைந்த சொல்லாய் ...'**

என வரும் பாடலில் சந்திரனைத் தொடக்கூடிய அளவிற்கு உயரமுடைய மாடம் என்பது அவரது வர்ணனையாகும். கோவில்களில் நான்கு திக்குகளுக்கும் நான்கு கோபுரங்களுக்கும், நடுவில் ஒரு கோபுரமுமாகப் பஞ்ச கோபுரங்கள் கட்டலாம் எனச்சிற்ப நூல்கள் எடுத்துக்கூறுகின்றன இவற்றைவிட கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே கோபுரங்கள் கட்டவும் மானசாரம் என்ற நூல் அறிவுறுத்துகிறது. பொதுவாக ஒரு சில கோவில்களைத் தவிர இலங்கையில் உள்ள கோவில்கள் யாவும் இரண்டுவீதிகள் மட்டுமே உள்ளன. இந்தியாவில் மூன்று முதல் ஏழு வரையான வீதிகள் உள்ளன. ஒரு கோவிலுக்கு பல கோபுரங்கள் உள்ள கோவில்களும் உள்ளன. தென்னிந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற திருத்தலங்கள் பல கோபுரங்களுடன் காட்சி அளிக்கின்றன. ஒவ்வொரு வீதியின் வாசலிலும் கோபுரங்கள் அமைப்பது பற்றியும், சிற்ப நூல்கள் கூறுகின்றன. முதலாவது கோபுரம், துவார சோபை எனவும், இரண்டாவது கோபுரம் துவாரசாலை எனவும், மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும், நான்காவது கோபுரம் துவார ஹர்மியம் எனவும். ஐந்தாவது கோபுரம் மஹாமர்யதை எனவும் பெயர் பெறும்.

இவ்வைந்தாவது கோபுரமே மகாகோபுரம் எனவும், ராஜகோபுரம் எனவும் சிறப்புப்பெயர் பெறுகிறது. பொதுவாக மகாகோபுரம் எனப்படும் ராஜகோபுரமே கோவில்களில் காணப்படும்.

கோபுரங்களின் தோற்றம், அமைப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பல பெயர்களால் அவை அழைக்கப்படுகின்றன. வல்லீ, கவாஷம், குஜராஷம், ஸ்வஸ்திகம், நாகபந்தம், சர்வதோபேதம், நந்தியாவர்த்தம், புஸ்பதந்தம் முதலியன சிலவாகும்.

கோபுரம் என்பதற்கு இறைவனை நோக்கி ஆன்மாக்கள் செல்லும் வழி எனப் பொருள் கூறுவர். கருவறையின் மேல் உள்ள விமானம் சிரசாகவும், கோபுரம் இறைவனின் திருப்பாதமாகவும் கூறப்படும் . திருமூலர் திருமந்திரத்தில் பின்வரும் பாடல் ஒன்றின் மூலம் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகிறார்.

**'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளல் பிரானுக்குத் வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே'**

இறைவனுடைய ஆலயத்திற்கு செல்வதற்கு திருக்கோபுரம் எமக்கு வாசலாக இருப்பதுபோல் எமது தூய்மையான மனத்திற்குள் எமது வாய் கோபுர வாசலாக இருக்கும். அதாவது இறைவனது நாமங்களை நாம் மீண்டும் மீண்டும் உச்சரிக்க வேண்டும் என்ற மறைமுகக் கருத்தும் உள்ளது.

கோவிலின் கருவறையில் இருப்பது சூட்சுமலிங்கம் எனவும், ஆலயத்தில் நடுவில் இருப்பது பத்திரலிங்கம். அதாவது பலிபீடம் எனவும், ஆலயத்தின் முகப்பு வாசல் இருப்பது ஸ்தூல லிங்கம் எனப்படும் ராஜகோபுரம் எனவும் அழைக்கப்படும். லிங்கம் எனின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணமான இடம் எனக் குறிப்பிடப்படும். எமது புலன் ஒடுக்கத்துக்கும், இறையுணர்வின் தோற்றத்திற்கும் காரணமாக ஸ்தூல லிங்கம் முதல் அனைத்து லிங்கங்களும் இடமளிப்பதாக யாம் கருதலாம். இவ்வாறு லிங்கங்களுடன் தொடர்வுபடுத்தி மேற்படி இடங்களைக் குறிப்பிடுவது போல் ஆத்மாவோடு தொடர்புபடுத்தியும் மேற்படி இடங்களைக் குறிப்பிடுவர். கோபுரம் - பூதாத்மா, பலிபீடம் அந்தராத்மா. துவஜஸ்தம்பம் - தத்துவாத்மா, லிங்கம் ஜீவாத்மா. குரு மந்திராத்மா, விமானம் பரமாத்மா, இவ்வாறு சர்வ ஞானோத்தர ஆகமம் குறிப்பிடுகிறது.எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனும் ஆத்மாவும் இணையும் இடமாக ஆலயமும், அங்குள்ள புனித அடையாளங்களும் விளங்குகின்றன என்பதை நாம் உணரலாம். ராஜகோபுரம் என்பது மிகப்பெரிய கோபுரம் என்பது கருத்தாகும். உமாபதி சிவாச்சாரியார் கொடிக்கவி என்னும் பாடலில் கோபுர வாசற் சிறப்பினைத் பற்றிக் கூறுகின்றார்.

**'பொருளாம் பொருளேது போதேது கண்ணே (து)**
**இருளாம் வெளியே திரவே (து) - அருளாளா**
**நீபுரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்**
**கோபுர வாசற் கொடி'**

இறைவா நீதான் அனைத்தையும் ஆளும் ராஜா. நீ பாதுகாக்காத உலகம் எங்குள்ளது. உன் அருள் இல்லாமல் யாம் எதையும் அறிய முடியாது . நீயே எல்லாமாக இருந்து எல்லாவற்றிற்குஞ் சாட்சியாக இருப்பதால் நீ காண உன் கோபுர வாசலில் கொடி கட்டினேன். எனக் கூறுவதைக் காணலாம். எனவே கோபுரமானது இறைவனே, அனைத்தையும் ஆளுகின்ற தன்மை உடையவன் என்பதைக் குறிப்பதாக உணரலாம். இதனால் ராஜகோபுரம் எனக் கூறுவதும் பொருந்தும். கோபுரங்களில் காணப்படும் சிற்பங்கள் புராணங்கள் கூறும் தெய்வீக வரலாற்றையும், ஆலய வரலாற்றையும் உள்ளடக்கியதாக இருப்பதை நாம் கவனிக்கலாம்.எனவே கோபுர தர்சனத்தால் மன ஒடுக்கமும் ஆன்மீகத் தெளிவும், இறைவனின் அருளாட்சியும் கிடைக்கும் என்பதை நாம் அனுபவபூர்வமாக உணரலாம்.

**நன்றி: அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் தேவஸ்தானம் இராஜகோபுர மகா கும்பாபிஷேகச் சிறப்புமலர் -1999**

## கணநாத நாயனார்

சோழநாட்டில் உள்ள சீர்காழியில் தோன்றியவர் கணநாதர். இவர் வேதிய குலத்தைச் சேர்ந்தவர். இல்லற வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர். திருத்தோணி சிவபெருமானுக்கு திருத்தொண்டு செய்து வருபவர்.

திருநந்தவனப் பணி செய்வோர், மலர் கொய்வோர், திருமாலை கட்டுவோர்., திருமஞ்சனம் எடுப்போர், திரு அலகிடுவோர், திருமெழுகிடுவோர், திருவிளக்கேற்றுவோர், திருமறை எழுதுவோர், ஓதுவோர் முதலிய திருத்தொண்டர்களுக்கு குறைகள் ஏற்பட்டால் அவற்றை நீக்குவார்.

இத்தகைய திருத்தொண்டுகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களையும் திருத்தொண்டர்களாக்குவார். மேலும், இவர் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளை எப்பொழுதும் பேரன்போடு வழிபட்டு வந்தார். அதனால் இவர் திருக்கயிலையை அடைந்து சிவகணங்களுக்குத் தலைவரானார். அன்று முதல் இவர், கணநாத நாயனார் என்றே அழைக்கப்படுகிறார்.

**குருபூசை - பங்குனி திருவாதிரை**

**- அம்பை சிவன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

மதுரை என்றாலே பலருக்கும் உடனடியாக நினைவுக்கு வருவது மீனாட்சி அம்மன் கோவிலாகும். சிவபெருமான் மற்றும் அம்மன் இருவருக்குமான கோவில்களில் முதன்மைச் சிறப்பு பெற்றது மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில். மதுரையில் மீனாட்சி பிறந்ததாகக் கருதப்படுவதால், மீனாட்சி சன்னிதானம் முதன்மையாக உள்ளது. அம்மனை வணங்கிய பின்பே சிவபெருமானை வணங்கும் மரபு கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆலயம் மீனாட்சி, சுந்தரேஸ்வரரை முதன்மை விகிரகங்களாகவும் கடம்ப மரத்தினை தலவிருட்ஷமாகவும் கொண்டுள்ளது. பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியனின் கனவில் சிவபெருமான் வந்ததால் அவன் கடம்பவனம் என்ற காட்டை அழித்து மதுரை மாநகரையும் இந்த சிவசக்தி தலத்தையும் அமைத்ததாகக் கருதப்படுகிறது. மீனாட்சி அம்மன் கோவிலைச்சுற்றி நான்கு மாடங்கள் அமைத்துள்ளதால் நான்மாடக்கூடல் என்ற பெயரும் மதுரைக்கு உண்டு. சிவபெருமானின் அணிகலன்களில் ஒன்றான பாம்பு வட்டமாக தன் வாலை வாயினால் கவ்விக் கொண்டு இத்தலத்தின் எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட்டது என்று ஒரு வரலாறு கூறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோயில் எட்டு கோபுரங்களையும் இரண்டு விமானங்களையும் உடையது. இங்குள்ள கருவறை விமானங்கள், இந்திர விமானம் என்று அழைக்கப்படுகிறது. 32 சிங்கங்களும், 64 சிவகணங்களும், 8 வெள்ளை யானைகளும் இந்த கருவறை விமானங்களைத் தாங்குகின்றன.

மீனாட்சி அம்மன் திருக்கோவில் பழமை வாய்ந்தது. இத்திருக்கோயில் கிழக்கு மேற்காக 847 அடியும், தெற்கு வடக்காக 792 அடியும் உடையது. இக்கோவிலின் ஆடி வீதிகளில் நான்கு புறமும் ஒன்பது நிலைகளை உடைய நான்கு கோபுரங்கள் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது. கிழக்குக் கோபுரம் கி.பி. 1216 முதல் 1238 ஆண்டுக்குள்ளும், மேற்குக் கோபுரம் கி.பி. 1323 ஆம் ஆண்டிலும், தெற்கு கோபுரம் கி.பி. 1559 ஆம் ஆண்டிலும், வடக்குக் கோபுரம் கி.பி. 1564 முதல் 1572 ஆம் ஆண்டிலும் கட்டப்பெற்று முடிக்கப் பெறாமல், பின்னர் 1878 ஆம் ஆண்டில் தேவகோட்டை நகரத்தார் சமுதாயத்தைச் சேர்ந்த வயிநாகரம் குடும்பத்தினரால் முடிக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது. இவற்றுள் தெற்குக் கோபுரம் மிக உயரமானதாகும். இதன் உயரம் 160 அடி ஆக இருக்கிறது. மீனாட்சி அம்மன் கோபுரம் காளத்தி முதலியாரால் கி.பி. 1570ல் கட்டப் பெற்று 1963 ஆம் ஆண்டில் சிவகங்கை அரசர் சண்முகத்தால் திருப்பணி செய்யப் பெற்றது. சுவாமி கோபுரம் கி.பி. 1570 ஆம் ஆண்டில் கட்டப் பெற்று திருமலைகுமரர் அறநிலையத்தால் திருப்பணி செய்யப் பெற்றது. இக்கோயிலுனுள் ஒரு ஏக்கர் பரப்பளவில் பொற்றாமரைக்குளம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலினுள் அஷ்டசக்தி மண்டபம், மீனாட்சி நாயககர் மண்டபம், முதலி மண்டபம், ஊஞ்சல் மண்டபம், கம்பத்தடி மண்டபம், கிளிக் கூட்டு மண்டபம், மங்கையர்க்கரசி மண்டபம், சேர்வைக்காரர் மண்டபம் போன்ற கலையழகு மிக்க மண்டபங்கள் இருக்கின்றன. கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் அவருடைய அமைச்சர் அரியநாத முதலியாரால் இங்கு அமைக்கப்பட்ட ஆயிரங்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம் மிகச் சிறப்பு பெற்ற ஒன்றாகும். இம்மண்டபத்தில் 985 தூண்கள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர கோயிலின் கிழக்குக் கோபுரத்திற்கு எதிரே 124 சிற்பத்தூண்கள் அடங்கிய புது மண்டபம் ஒன்றும் உள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலை தாமரை மொட்டைப் போல் வைத்துக் கொண்டால் அதைச் சுற்றியுள்ள தெருக்களை தாமரை இதழ்களாகக் கூறலாம். மீனாட்சியம்மன் கோயிலுக்குள் இருக்கும் வீதிகளுக்கு ஆடி வீதி என்று பெயர். அதைத் தாண்டி கோயிலுக்கு வெளியில் சித்திரை வீதிகள், சித்திரை வீதிகளுக்கு அடுத்த வீதிகள் ஆவணி வீதிகள், அதைத் தாண்டி வெளியே வந்தால் மாசி வீதிகள். அதையும் தாண்டி வெளி வீதிகள் என மதுரை நகர் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தெருக்களுக்கு தமிழ் மாதங்களின் பெயர் வைக்கப்பட்டிருப்பதற்கும் ஒரு காரணம் உள்ளது. மன்னர்கள் காலத்தில் குறிப்பிட்ட மாதங்களில் நடைபெறும் விழாக்கள் அந்த மாதங்களின் பெயரிலான தெருக்களில்தான் நடைபெறும். "மீனாட்சி சுந்தரேஸ்வரர்" ஆலயத்தில் மீனாட்சி, சுந்தரேஸ்வரர் விகிரக வடிவிலும் பூரிக்கப்படுகின்றன. மதுரை மீனாட்சியில் அமைந்துள்ள முதன்மை விக்கிரகம் முழுவதுமாக தூய மரகத மாணிக்கத்தினால் உருவாக்கப்பட்டதாகும். மரகதத்தின் இயற்கை வர்ணமான பச்சை நிறத்தில் காட்சி தரும் மூல விக்கிரகத்தினை "மரகதவல்லி"எனவும் அழைக்கின்றனர்.

மதுரை மீனாட்சி கோவில் 45 ஏக்கர் (180,000 சதுர மீட்டர்கள்) நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.ஆலயத்தின் மொத்த தள அமைப்பு 254 மீட்டர் நீளமும் 237 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இந்த ஆலயம் 8 கோபுரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. 8 கோபுரங்களும், நான்கு முனை சதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள இரட்டை கோபுரத்தில் ஒன்று மீனாட்சிக்கும், மற்றொன்று சுந்தரேஸ்வரர்க்கும் அர்பணிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது தட்டுக்களை (அடுக்கு) கொண்ட கோபுரங்களுள் பிரசித்தமானதும் மிக உயரமானதுமாக தெற்கு வாசல் 170 அடி (52 மீற்றர்) உயரமுடையது.மற்றய வடக்கு, மேற்கு, கிழக்கு கோபுரங்கள் முறையே 160, 163, 161 அடி உயரம் என்பதும் குறிப்பிடதக்கது. மீனாட்சி ஆலயம் பல உள்ளக மண்டபங்களையும் கொண்டுள்ளது. இவற்றுள் ஆயிரம் கால் (1000 தூண்கள்) மண்டபம் மிகவும் பிரசித்தி பெற்றது. 600 வருடங்களின் மேலான கட்டுமானத்தில் உருவாகியதும், மிகவும் கலை அம்சம் மிக்கதுமான இந்த ஆலயத்தில் மொத்தமாக 33 மில்லியன் கலை வேலைப்பாடுகள் இருப்பதாக சொல்லப்படுகின்றது. ஆலய உட்பகுதியில் ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள பொற்தாமரை குளமும், தலவிருட்ஷமான கடம்ப மரமும் ஆலயத்தின் வரலாற்றில் மேலும் சிறப்பு சேர்க்கின்றன.

பலநூற்றாண்டு பழமையான கட்டிடவேலைப்பாடுகளை கொண்டுள்ள இந்த ஆலயம் நவீன பல் வர்ண பூர்ச்சுக்களால் தற்காலத்தில் அலங்கரிக்கப் பட்டுள்ளது. வரலாற்று தொன்மையும் பிரமிக்கவைக்கும் கலை நுணுக்கமும் ஒன்றுசேர உள்ள இந்த ஆலயமனது உலக அதிசையங்களின் வரிசையில் போட்டி போட்டது நினைவிருக்கலாம்.ஒரு நகரம் எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும், அதன் கட்டமைப்புகள் எவ்வாறு இருக்க வேண்டும், அதன் வீதி அமைப்புகள் எவ்வாறு உருவாகப்பட வேண்டும் என்பதை மதுரையைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம் என்று கர்ம வீரர் காமராஜர் கூறி உள்ளார். அது மீனாட்சி அம்மன் கோவிலையும் அதைச்சுற்றி உள்ள வீதிகளையும் கருத்தில் கொண்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களை போக்கும் பங்குனி உத்தரத்தின் மகிமை

**செல்வி. றஜிதா செல்வநாதன்**
திருமகள் அழுத்தகம்

மாதந்தோறும் உத்திர நட்சத்திரம் வந்தாலும், பங்குனி மாதத்தில் வரும் உத்திரத்திற்கு அதிக மகிமைகள் உண்டு. தெய்வங்களே உத்திரத்தை சிறந்த நட்சத்திரம் என்று தேர்வு செய்த பெருமை உண்டு. இந்த நாளுக்குரிய சிறப்புகள் என்னென்ன என்பது குறித்து தெரிந்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விழாக்கள் நடத்துவது வழக்கம். அதில் பங்குனி உத்திர நட்சத்திரத்துக்கு அதிக மகத்துவம் உண்டு. இந்தத் திருநாளில்தான் மிக அதிகமான தெய்வத்திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகப் புராணங்கள் கூறுகின்றன.

12-வது மாதமான பங்குனியும், 12-வது நட்சத்திரமான உத்திரமும் இணையும் புனித நாள் பங்குனி உத்திரம். இந்த விரதத்தை கல்யாண விரதம், திருமண விரதம் என்றும் கூறுவார்கள். சிவபெருமான் அன்னை பார்வதியோடு மணக்கோலத்தில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மதுரையில் காட்சி தந்தருளிய திருநாள் இதுதான். அன்னை மீனாட்சியைத் திருமணம் செய்து மீனாட்சி சுந்தரேஸ்வரராகக் காட்சி தந்ததும் இந்நாளில்தான். ஆண்டு தோறும் மதுரையில் இத்திருமண விழாவை பங்குனி உத்திரத்தன்று சிறப்பாக நடத்துகின்றனர்.

சிவனின் தவத்தைக் கலைத்ததால் இறைவனின் நெற்றிக் கண்ணால் மன்மதன் எரிக்கப்பட்டான். ரதியின் வேண்டுதலால் மீண்டும் மன்மதன் உயிர் பெற்ற நாளும் இதுதான். முருகன் தெய்வானையை இந்த நாளில் தான் திருமணம் புரிந்து கொண்டார். அத்துடன் வள்ளியின் அவதார தினமும் இதுதான்.

பர்வதராஜன் தவத்தால் பத்மத்தில் அவதரித்த பார்வதியை சிவபெருமான் கரம்பிடித்த நாளும் இதுவே. ஸ்ரீரங்க மன்னார்- ஆண்டாள் திருக்கல்யாண வைபவம் நடந்த நாளும் இதுதான். மகாலட்சுமி பங்குனி உத்திர விரதத்தை அனுசரித்துதான் ஸ்ரீ மகா விஷ்ணுவின் மார்பில் உறையும் பாக்கியம் பெற்றாள்.

மகாலட்சுமியின் அவதார நாளும் பங்குனி உத்திர நாள்தான். இந்நாளில் வைணவ ஆலயங்களில் மணக்கோலத்தில் தாயாரும் திருமாலும் காட்சி தருவார்கள். அன்று காஞ்சிவரதராஜர் ஆலயத்தில் ஸ்ரீபெருந்தேவித் தாயார் சந்நிதியில் ஸ்ரீதேவி பூதேவி, மலையாள நாச்சியார் ஆண்டாள் மற்றும் பெருந்தேவித் தாயார் சகிதமாக ஸ்ரீ வரதராஜர் காட்சி தருவார். காஞ்சியில் காமாட்சி - ஏகாம்பரேஸ்வரர் திருமண விழா நடைபெறும் போது, அதே மண்டபத்தில் ஏராளமானோர் திருமணம் செய்து கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவேந்திரன்- இந்திராணி, நான்முகன்- கலைவாணி திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் நடைபெற்றன. தசரத மைந்தர்கள் ஸ்ரீ ராமன்- சீதை, லட்சுமணன்- ஊர்மிளா, பரதன்- மாண்டவி, சத்ருக்னன்- ஸ்ருதகீர்த்தி திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் ஒரே மேடையில் மிதிலையில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

அழகுமிகு 27 கன்னியர்களை சந்திரன் மனைவிகளாக ஏற்றுக் கொண்ட தினமும் இதுதான். பங்குனி உத்திரத்தன்று சில கோவில்களில் தீர்த்தவாரியும் நடைபெறும். அப்போது அந்த தலங்களில் உள்ள கடல், ஏரி, ஆறு, குளம், கிணறு போன்றவற்றில் புனித நீராடினால் புண்ணியம் கிடைக்கும்.

பங்குனி உத்திரத்தன்று கன்னிப் பெண்கள் கல்யாண விரதம் கடைப்பிடித்து அருகே உள்ள ஆலயங்களில் திருமணக்கோல தெய்வங்களைத் தரிசித்தால் அவர்களுக்கும் கல்யாண வைபோகம் தான். அது போல திருமழப்பாடியில் நந்திக் கல்யாணம் கண்டால் முந்திக் கல்யாணம்தான்.

பங்குனி மாதத்தில் ஏற்றிய தீபத்தில் சிவனும் பார்வதியும் ஐக்கிய சொரூபமாகக் காட்சி தருகின்றனர். அதனால் அன்று திருவிளக்கு பூஜை செய்து பாவங்களை விலக்கி, பகை அகற்றி புண்ணியம் பெறலாம். காரைக்கால் அம்மையார் முக்தியடைந்த தினமும் பங்குனி உத்திரம்தான், அன்று தண்ணீர்ப்பந்தல் வைத்து நீர்மோர் தானம் தருவது மிகவும் புண்ணியம். 48 ஆண்டுகள் பங்குனி உத்திர விரதம் இருந்தவர்களின் மறு பிறவி தெய்வத் பிறவியாக அமையும்.

இந்த திருநாளில் லோபமுத்திரை அகத்திய முனிவரையும், திருமாலின் புதல்விகளான அமிர்தவல்லியும் சுந்தரவல்லியும் தேவயானை வள்ளியாகப் பிறவி எடுத்து முருகனையும் மணந்து கொண்டனர். பூரணா, பூஷ்கலா ஐயப்பனையும் ரதி மன்மதனையும் கல்யாணம் செய்து கொண்டனர் என்று சுந்தபுராணம் கூறுகிறது.

திருமணஞ்சேரி, ஆலங்குடி, ஸ்ரீ வாஞ்சியம், திருமகல், திருவிடந்தை, திருவேதிக்குடி, பிள்ளயார்பட்டி, திருவீழிமிழலை, திருப்பரங்குன்றம், கன்னியாகுமரி, காஞ்சி, மாங்காடு, ஸ்ரீ வில்லிபுத்தூர், திருச்செந்தூர், திருசத்தி முற்றம், கேரளத்தின் திருமணஞ்சேரி, ஆரியங்காவு மற்றும் மண முடிச்சநல்லூர், திருப்பாச்சேத்தி, திருவெணங்காடு, திருவேள்விக்குடி, திருநெல்வேலி, திருவாரூர், வேதாரண்யம், திருவிடை மருதூர், கும்பகோணம், திருநல்லூர், திருமழப்பாடி, திருப்பாலைத் துறை, பந்த நல்லூர், மதுரை, திருக்குற்றாலம், திருவேற்காடு, திருச்சோற்றுத்துறை, வைத்தீஸ்வரன் கோவில், திருநாகேஸ்வரம், பூவாளூர், சக்தி கோவில் திருமணமங்கலம், விசாலேஸ்வரன் கோவில் தாடிக்கொம்பு, திருத்துறைபூண்டி ஆகிய தலங்களில் ஏதேனும் ஒன்றுக்குச் சென்று திருமணம் விரைவில் முடிய வேண்டும் என வேண்டி கொண்டு வரலாம். வேண்டுதல் சீக்கிரம் நிறைவேறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் கன்னிகா தானம் செய்து வைக்க பிரம்மன் வேள்வி நடத்த சொக்கநாதரான சிவன் மீனாட்சியம்மையை பங்குனி உத்தரத்தில் மணக்கிறார். திருமண வைபத்தில் கன்னிகா தானம் அளிக்கும் சடங்குதான் முக்கியமானது. இக்கோல சுதைச் சிற்பம்தான் எல்லா திருமண மண்டபங்களிலும் மணமேடையின் பின்புற சுவரில் இடம் பெற்றுள்ளது. அவ்வளவு அழகிய அற்புதமான காட்சி இது.

சிவ-பார்வதி திருமணக் கோலங்களில் ஏதேனும் ஒன்றை தரிசித்தாலும், ஆலயங்களில் திருமண வைபவம் நடைபெறும்போது அதில் கலந்து கொண்டாலும் மங்களகரமான மண வாழ்வுபெற்று மகிழ்வுடன் வாழலாம். கன்னிகள் விரதமிருந்து இப்படி தரிசித்தால் விரைவில் திருமணம் கூடுவதுடன் நல்ல கணவன் கிடைத்து இனிமையான வாழ்வும் அமையும்.

பங்குனி உத்திரவிரதம் மேற் கொண்டு அருகே உள்ள கோவில்களுக்கு சென்று வழிபட்டால் சகல பாவங்களும் தொலையும். இந்த விரதத்தை கடை பிடித்துதான் தேவர்களின் தலைவனான இந்திரன் தனது மனைவியான இந்திராணியையும், படைத்தல் கடவுளான பிரம்மன் தனது மனைவியான சரஸ்வதியையும் பெற்றார்.

இந்த நன்னாளில் எல்லா முருகன் ஆலயங்களிலும் வள்ளி திருக்கல்யாணம், மதுரை கள்ளழகர் திருக்கல்யாணம், திருப்பரங்குன்றம் ஆண்டவர் தங்கக் குதிரையில் பவனி, ஸ்ரீ வில்லிபுத்தூர், மோகூர், எம்பெருமான் திருக்கல்யாணம் நடக்க உள்ளன. அழகன் முருகனுக்கு உகந்த நாள். அவர்தம் பக்தர்கள் காவடி எடுப்பதற்கும், விரதம் இருப்பதற்கும் உகந்த நாள். செல்வம் படைத்த ஆன்மிக மெய்யன்பர்கள் இந்நாளில் முருகப் பெருமானுக்கு திருமணம் செய்விக்கலாம்.

உவமையற்ற வில்வீரன் அர்ஜுனனுக்கு பல்குணன் என்ற திருநாமம் உண்டு. இது பங்குனி உத்திரத்தன்று பிறந்ததால் வந்த பெயர். ஊன் உறக்கமின்றி கண் இமையால் நம்மைகாக்கும் இமையவர்கள் என ஸ்ரீ தாயாரும், பாற்கடல் பள்ளி கொண்டோனும் போற்றும் நாள் பங்குனி உத்திரம். உத்திரம், தாயாரின் திருநட்சத்திரம்.

பங்குனியில் மரங்களும் செடிகளும் பூத்துக் குலுங்குகின்றன. பனி தரும் குளிர்ச்சியும், சூரிய ஒளி தரும் வெப்பமும் இதமாகவும், பதமாகவும் உள்ளன. தமிழ் நூல்கள் இம்மாதத்தைப் பங்குனிப் பருவம் என்றும், இதில் கொண்டாடப்படும் வசந்த விழாவைப் பங்குனி விழா என்றும் சிறப்பித்துக் கூறுகின்றன.

பங்குனி உத்திர நல்ல நாளில் கூடுதலாக தவறாது வரமளிக்கும் ஆற்றல் சிவசக்திக்கு உண்டு என்று புராணங்கள் சொல்கின்றன. கொள்ளிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ புலீஸ்வரி அம்மன் ஆலயத்திலுள்ள தல விருட்ச மலர்கள் பங்குனி உத்திரத்தன்றுதான் பூக்கும். திருவையாறு அருகிலுள்ள திங்களூர் சிவாலயத்தில், பங்குனி உத்திரத் திருநாளில் மட்டும், லிங்கத் திருமேனியை சந்திரன் தனது கிரணங்களால் தழுவி வழிபடுவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூசம், கந்தர் சஷ்டி, திருக்கார்த்திகை, வைகாசி விசாகம் என்பன போல் பங்குனி உத்திரம் என்றாலே அது முருகன் கோயில் திருவிழா நாள் என்று தான் எல்லோருக்கும் உடனே தோன்றும். இம்மாதத்தில் தான் அசுரர்களின் கொட்டத்தை அடக்க முருகப்பெருமான், தன் தாய், தந்தையரை வணங்கி பயணத்தை ஆரம்பித்தார். அதனால் முருகனின் அறுபடை வீடுகளிலும் பங்குனி உத்திர திருவிழா வெகுவிமர்சியாக கடைபிடிக்கப்படுகிறது. இதில் ஏராளமான முருக பக்தர்கள் விரதமிருந்து, காவடியெடுத்து முருகப் பெருமானுக்கு வேண்டுதல் செலுத்துகின்றனர்.

பங்குனி உத்திர நாளில் நீர் மோர் வழங்குதல், விரதமிருத்தல், தெய்வத் திருமணங்களை தரிசிப்பது, அன்னதானம் செய்வது போன்றவை பெரும் புண்ணியத்தைத் தரும். அதில் பழனியின் ரத ஊர்வலமும் மதுரைகள்ளழகர் கோயில் விழாவும் பிரசித்தி பெற்றவை. பங்குனி உத்திரம் அன்று நாம் நம் குலதெய்வங்களை வழிபட உகந்த நாளாக அமைகின்றது. இந்நாளில் நமது குலதெய்வ கோவில்களுக்கு சென்று வழிபாடு செய்வது நம் குலம் சிறக்க உதவுகின்றது.

**வீரமாமுனிவர்**

இத்தாலியில் பிறந்த இவர் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் - "கோல்டு வெல் போப்" ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வந்தவர். இலங்கையில் இருந்த மக்களைக் கிறிஸ்தவர்களாக மதம் மாற்றம் செய்வதற்காகவே இலங்கைக்கு வந்தவர். தமிழ் மக்களோடு உரையாடுவதற்காக தமிழ் பயின்றார். தமிழ்மொழியின் இனிமையில் மகிழ்ந்தார். இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்காக இந்து சமயத்தைக் கற்றார். இந்து சமயத்திலுள்ள உண்மைகளையும், கடவுளுடைய அன்பையும் உணர்ந்தார். தான் ஒரு உண்மையான இந்துவாக மாறினார், குடுமி வைத்தார், கடுக்கன் அணிந்தார், சிவ தீட்ஷை பெற்று விபூதி தரித்தார், உருத்திராட்ஷம் அணிந்தார், பஞ்சகச்சம், உத்தரீயம் அணிந்தார் மிதியடியில் நடந்து திரிந்தார். வீரமாமுனிவர் என்னும் நாமம் பூண்டு இறைவனுக்குத் தொண்டு புரிந்தார். இவர் இயற்றிய நூல்களுள் "தேம்பாவணியும்" ஒன்று.

*1680ம் ஆண்டு பிறந்த இவர் 1747ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.*

**'மதம் மாற்ற வந்தவரே மதம் மாறினாரே'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் உள்ள உயரமான கோவில் கோபுரங்கள்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்று சொல்லும் வழக்கம் வந்தது. கோவில் கோபுரம், விமானம் இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை தெரிந்து கொள்ளலாம்.

ஆலயம் என்பதை படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலாக எண்ணிக் கொள்ளவேண்டும். மனிதனின் தலை, கழுத்து, மார்பு, தொப்புள், கால்கள், பாதங்கள் இப்படியாக கோயிலின் கர்ப்பக்கிரகம் முதல் ராஜகோபுரம் வரை உள்ளன.

கருவறை விமானம் தலை, அர்த்தமண்டபம் கழுத்து, மகாமண்டபம் மார்பு, இங்கு தான் இதயதுடிப்பு இருப்பது போல நடராஜர் நடனமாடும் சந்நிதி அமைக்கப்படும். தொப்புள் கொடிமரம். ராஜகோபுரம் பாதங்கள். இப்படி இறைத்திருமேனியாக இருக்கும் கோயிலில் கருவறையின் மேலே விமானம் உள்ளது. "மானம்" என்றால் "அளவு", "வி" என்றால் "கடந்தது". அளவு கடந்த தெய்வீக சக்தி கொண்டது விமானம்.

கோபுரம் என்பதை "கோபுரம்" என்று பிரிக்க வேண்டும். "கோ" என்றால் இறைவன். "புரம்" என்றால் "இருப்பிடம்". இறைவனின் இருப்பிடமே கோபுரம். அதனால் தான் எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் அளவுக்கு கோபுரத்தை உயரமாகக் கட்டுகிறார்கள். இதனால் தான் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்று சொல்லும் வழக்கம் வந்தது.

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். அப்படி ஒவ்வொரு ஊருக்கும் அழகு தருவது கோவில் ஆகும். கோவிலுக்கு அழகு தருவது கோபுரம் ஆகும். கோயில் வாசலில் அமைக்கப்படும் ராஜகோபுரமே மற்ற கோபுரங்களை விட உயரமாக இருக்கும். நெடுந்தொலைவிலிருந்து பார்த்தாலே இது கம்பீரமாகத் தெரியும் . இதை ஒரு லிங்கமாக எண்ணி வணங்குவதும் உண்டு. இதனை ஸ்தூல லிங்கம் என்று சொல்வது ஐதீகம். கோபுரம் இருக்கும் இடத்திற்கும், அது நம் பார்வையில் படும் இடத்திற்கும் இடைப்பட்ட இடத்தை பூலோக கைலாசம் என்றும் அழைக்கப்படும்.

கோபுரத்தை கடவுளின் திருவடி என்பர். கருவறைக்கு உள்ள புனிதம் இதற்கும் உண்டு.

**'நின்று கோபுரத்தை நிலமுறப் பணிந்து**
**நெடுந் திருவீதியை வணங்கி'...**

கோபுரத்தைக் கண்டவுடன் நிலத்தில் வீழ்ந்து வணங்க வேண்டும் என்று பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**'கோலக் கோபுரக் கோகரணஞ்**
**சூழா கால்களாற் பயனென்'**

என அப்பர் சுவாமிகள் கோபுரச் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்'

என்று கோபுர பெருமையை சொல்கிறார் திருமூலர்...

**கோபுர அமைப்பு:**

கோபுரம் என்பது சமய வரலாறு, புராணக் கதைகள், தத்துவம் முதலிய பல செய்திகளை எடுத்துக்கூறும் உயிர்த்தன்மை கொண்ட உருவங்களாகவே உயர்ந்து நிற்கின்றன. கோபுரத்தில் தேவகணங்கள், தெய்வ உருவங்கள், பறவைகள், விலங்குகள், புராண, இதிகாசக் காட்சிகள், மனிதர்கள், தேவியர்கள், மெய்யடியார்கள் எனப் பலவகை சிற்பங்கள் இருக்கும்.

நமது இரு கரங்களையும் தலைக்கு மேலாக வைத்து குவித்து வணங்கும் போது திருக்கோபுர அமைப்புக்கு ஒத்ததாக அவ்வமைப்பு இருப்பதைப் பொதுவாகக் காணலாம். நமது சக்திக்கு மேற்பட்டவர் இறைவன் என்பதையும், அவரை அடைவதற்கு நமது புலன் ஒடுக்கம் அவசியம் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

கோவில்களில் நான்கு திக்குகளுக்கும் நான்கு கோபுரங்களும், நடுவில் ஒரு கோபுரமாகப் பஞ்ச கோபுரங்கள் கட்டலாம் எனச் சிற்ப நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இவற்றை விட கோவிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே கோபுரங்கள் கட்டவும் மானசாரம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

ஒரு கோவிலுக்குப் பல கோபுரங்கள் உள்ள கோவில்களும் உள்ளன. தென்னிந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் போன்ற திருத்தலங்கள் பல கோபுரங்களுடன் காட்சி அளிக்கின்றன.

முதலாவது கோபுரம் துவார சோபை எனவும், இரண்டாவது கோபுரம் துவாரசாலை எனவும் மூன்றாவது கோபுரம் துவாரப் பிரசாதம் எனவும், நான்காவது கோபுரம் துவார ஹர்மியம் எனவும், ஐந்தாவது கோபுரம் மஹாமர்யதை எனவும் அழைக்கப்படுகின்றன. இவ்வைந்தாவது கோபுரமே மஹா கோபுரம் எனவும், ராஜ கோபுரம் எனவும் சிறப்புப் பெயர் பெறுகிறது. பொதுவாக மஹா கோபுரம் எனப்படும் ராஜ கோபுரமே சில கோவில்களில் காணப்படும்.

ராஜகோபுரத்தின் உள்ள நிலைகள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும். அவை மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்பனவாகயிருக்கும். மூன்று நிலைகள் - ஜாக்கிரத், ஸ்வப்பன, சுசுப்தி என்பவற்றைக் குறிக்கும்.

ஐந்து நிலைகள் - ஐம்பொறிகளைக் குறிக்கும் .
ஏழு நிலைகள் - ஐம்பொறிகளோடு மனம், புத்தி என இரண்டும் சேரும்.
ஒன்பது நிலைகள் - அந்த ஏழினொடு சித்தம், அங்காரம் என இரண்டும் சேரும்.
இந்தியாவில் உள்ள உயரமான 10 கோவில் கோபுரங்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. முருதேஸ்வரர் கோயில் - 249 அடி**

முருதேஸ்வரர் கோயில் தென்னிந்தியாவில் மிகவும் பிரபலமான கோவில் ஆகும். இங்கு உலகின் இரண்டாவது மிக உயர்ந்த சிவன் சிலை உள்ளது. இது 249 அடி உயரத்தில் 20 அடுக்கு கோபுரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இது நாட்டின் மிக உயரமான கோபுரமாக உள்ளது. இது கர்நாடகா மாநிலத்தில் பட்கல் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

**2. ரங்கநாதசுவாமி கோவில் - 239.5 அடி**

திருச்சி ஸ்ரீரங்கத்தில் உள்ள ரங்கநாதஸ்வாமி கோயில் தென்னிந்தியாவின் வைஷ்ணவ கோவில்களில் மிகவும் புகழ்பெற்றது, 108 திவ்ய தேசங்களில் ஒன்று. ரங்கநாதஸ்வாமி கோவிலின் கோபுரம் 239.5 அடி உயரம். இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த கோபுரம் ஆகும்.

**3. அண்ணாமலையார் கோவில் - 216.5 அடி**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் இது சிவபெருமானின் பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாகும். இக்கோவிலின் இராஜ கோபுரம் 217 அடி உயரம் கொண்டதாகும்.

**4. ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் - 193.5 அடி**

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் என்பது ஸ்ரீ வில்லிபுத்தூரில் அமைந்துள்ள பழமையானதும், ஆழ்வார்களுள் பெரியாழ்வார் மற்றும் ஆண்டாள் அவதரித்த திருத்தலம் மற்றும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான இந்து மத வைணவ கோவில் ஆகும். கோவிலின் கோபுரம் 193.5 அடி உயரம்.

தமிழ்நாடு அரசின் சின்னமாக இக்கோவிலின் கோபுரமும், அதன் முன்னர் இந்திய தேசிய இலச்சினையில் உள்ள நான்கு சிங்க முகம் காணப்படுகிறது. இதன் பின்னணியில் இருபுறமும் இந்திய தேசியக் கொடிகள் காணப்படுகிறது. வாய்மையே வெல்லும் வாசகமும் இடம்பெற்றுள்ளது.

**5. உலகளந்தபெருமாள் கோவில், திருக்கோவிலூர், விழுப்புரம் - 192 அடி**

தமிழ்நாட்டில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் நகரில் உள்ள உலகளந்த பெருமாள் கோவில் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான இதன் கோபுரம் 192 அடி உயரம்.

**6. ஏகாம்பரேஸ்வரர் கோயில் - 190 அடி**

திருக்கச்சியேகம்பம் எனப் பழைய சமய நூல்களில் குறிக்கப்படும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். கோவிலின் கோபுரம் 190 அடி உயரமுடையது.

**7. அழகர் கோவில், மதுரை - 187 அடி**

அழகர் கோயில் மதுரையிலிருந்து 21 கி.மீ. தொலைவில் உள்ள அழகர் மலையில் அமைந்துள்ள திருமால் கோவிலாகும். இந்த கோவில் கோபுரத்தின் உயரம் 187 அடி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. மீனாட்சி அம்மன் கோவில், மதுரை - 170அடி**

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கோயில் எட்டு கோபுரங்களையும் இரண்டு விமானங்களையும் உடையது. கோயிலின் வடக்கு கோபுரம் 170 அடி உயரம் உடையது.

**9. சாரங்கபாணி கோவில், கும்பகோணம் - 164 அடி**

சாரங்கபாணி சுவாமி கோயில் தமிழ்நாட்டின் கும்பகோணம் நகரில் அமைந்துள்ளது. இது 108 திவ்ய தேசங்களில் ஸ்ரீரங்கம், திருப்பதிக்கு அடுத்ததாக போற்றப்படுகிறது. இதன் ராஜகோபுரம் 164 அடி உயரம் உடையது.

**10. ராஜகோபாலசுவாமி கோவில், மன்னார்குடி - 154 அடி**

மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் ஒரு வைணவக் கோயில் ஆகும். இந்த கோயிலில் 16 கோபுரங்கள் உள்ளன. ராஜ கோபுரம் 154 அடி உயரம் கொண்டது.

ஆகம விதிப்படி கோயில் நிர்மாணித்து, அபிஷேகிக்கப்பட்டு, காலம் தவறாது கும்பாபிஷேகம் செய்யப்பட்டு வழிபாடு நடந்து கொண்டிருக்கிற கோயில்களில் உள்ள கோபுரங்களின் மேல் தங்கத்தாலும், செம்பினாலும் செய்யப்பட்ட கலசங்கள் தனது கூரிய முனை வழியாக ஆகாயத்தில் உள்ள உயிர் சக்தி என்று அழைக்கப்படும் பிராண சக்தியை கிரகித்து வெளிவிடுகிறது. அந்த சக்தியை நம் உடல் பெறுவதால் புது உணர்வு, உள்ளத் தூய்மை, ஆன்மிக ஈர்ப்பு, நோயின்மை, நோய் எதிர்ப்பு சக்தி அடைகிறோம். இதனால்தான் கோபுர தரிசனம் பாவ விமோசனம் என்று முன்னோர்கள் கூறினர்.

**கோபுர தரிசன பலன்கள்:**

கோயிலின் உள்ளே இருக்கக்கூடிய இறைவனின் பிரதிபிம்பம் தான் கோபுரங்கள், கோயிலுக்குச் செல்ல முடியாதவர்கள். கோபுரத்தைத் தரிசித்தாலே போதும், உள்ளேயிருக்கக்கூடிய எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய முழ பலன்கள் அனைத்தும் கிடைக்கும்.

காலை கோபுர தரிசனம் - நோய் நீக்கும்
மதியம் கோபுரதரிசனம் - செல்வ வளம் பெருகும்
மாலை கோபுர தரிசனம் - பாவம் போக்கும்
இரவு கோபுர தரிசனம் - வீடு பேறு கிடைக்கும்.

நாம் தூரத்திலிருந்து பார்க்கும்போது கோபுரங்களும். கோபுர கலசங்களும் தான் நம் கண்ணுக்குத் தெரியும், மேலும் கோபுரத்தின் உள்ளேயிருந்து வரக்கூடிய காற்று மருத்துவ குணம் மிக்கதாக இருக்கும்.

கோபுர தரிசனம் பாப விமோசனம் தரக் கூடியது. நாளும் ஆலயங்களுக்குச் சென்று இறைவனைத் தொழுவோம்! இயலாத நேரங்களில் கோபுர தரிசனம் செய்து நன்மைகளைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவண்ணாமலையும் ஒன்பது கோபுரங்களும்

பஞ்சபூதத் தலங்களில் திருவண்ணாமலை அக்னித் தலமாக விளங்குகிறது. அக்னிக்குரிய நாள் செவ்வாய்க்கிழமை, அந்த நாளில் இங்கு சிறப்பு பூஜைகள் நடக்கின்றன. அண்ணுதல் என்பதற்கு "நெருங்குதல்" என்று பொருள். "அண்ணா" என்பது, "நெருங்க முடியாத" என்ற பொருளைத் தரும். பிரம்மனாலும், விஷ்ணுவாலும் நெருங்க முடியாத நெருப்பு மலையாக நின்றதால், இத்தலம் "அண்ணாமலை" என்று பெயர் பெற்றது.

இத்தல கிளி கோபுரத்தின் கீழ் இடப் பக்கம் ஒரு விநாயகர் சன்னிதி உள்ளது. இவருக்கு "அல்லல் தீர்க்கும் விநாயகர்" என்று பெயர். முருகப்பெருமானுக்கு இருப்பது போல விநாயகருக்கும் உள்ள ஆறு படைவீடுகளில், இது முதல் படைவீடாகும்.

கிரிவலப்பாதையின் எட்டு திசைகளுக்கும் எட்டு லிங்கங்கள் இருக்கின்றன. இதனை அஷ்டலிங்கங்கள் என்கிறோம். அவை, இந்திர லிங்கம், அக்னி லிங்கம், எம லிங்கம், நிருதி லிங்கம், வருண லிங்கம், வாயுலிங்கம், குபேரலிங்கம், ஈசான லிங்கம் ஆகியவை ஆகும். இங்குள்ள இறைவன், "அண்ணாமலையார், அருணாச்சலேஸ்வரர்" என்றும், அம்பாள் "உண்ணாமுலையம்மன், அபிதகுஜாம்பாள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள். அம்மனின் 51 சக்தி பீடங்களில் இது அருணை சக்தி பீடமாக விளங்குகிறது.

25 ஏக்கர் பரப்பளவில் அமைந்த பிரமாண்ட ஆலயம் இது. இதில் 9 கோபுரங்கள், 6 பிரகாரங்கள், 142 சன்னிதிகள், 306 மண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபம் உள்ளிட்டவை அடங்கியிருக்கின்றன. அண்ணாமலையார் ஆலயத்தின் தற்போதைய முழுமையான கட்டிட அமைப்புகள் அனைத்தும் கட்டி முடிக்க, சுமார் 1000 ஆண்டுகள் ஆகி இருப்பதாக கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. கயிலாய மலையில் சிவபெருமான் வீற்றிருப்பதால் அது புனிதமானது. அதே போல் சிவபெருமானே மலையாக வீற்றிருப்பதால் திருவண்ணாமலையும் புனிதமானதாக கருதப்படுகிறது.

இந்த மலை கிருத யுகத்தில் நெருப்பு மலையாகவும், திரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் உள்ளதாக புராணம் சொல்கிறது. இங்கு பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவது சிறப்புக்குரியது. கிரிவலம் வரும் ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு பலன் கிடைப்பதாக ஐதீகம். சித்தர்கள் இன்றும் அருபமாக வாழ்வதாக கருதப்படும் இங்கு, கிரிவலப் பாதையை சித்தர்களும் வலம் வருவதாக நம்பிக்கை நிலவுகிறது.

கார்த்திகை தீபத் திருநாள் அன்று, 2668 அடி உயரம் கொண்ட மலை உச்சியில், தீபம் ஏற்றப்படுகிறது. 7 அடி உயரம் கொண்ட கொப்பரையில், 1000 மீட்டர் காடா துணியால் ஆன திரி, மூவாயிரம் கிலோ பசுநெய், 2 கிலோ கற்பூரம் சேர்த்து இந்த தீபம் ஏற்றப்படும். தீபம் தொடர்ந்து 11 நாட்கள் எரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருவண்ணாமலைக்கு "நவதுவார பதி" என்றும் ஒரு பெயர் உண்டு. அதற்கு 9 நுழைவாயில்களைக் கொண்ட நகரம் என்று அர்த்தமாகும். திருவண்ணாமலைக்கும் 9 என்ற எண்ணுக்கும் நிறைய தொடர்பு உண்டு. அதில் ஒன்று, திருவண்ணாமலை ஆலயத்தில் 9 கோபுரங்கள் இருப்பதாகும். இந்த 9 கோபுரங்களில் 4 கோபுரங்கள் பெரியது. 5 கோபுரங்கள் "கட்டை கோபுரம்" என்றழைக்கப்படும் சிறிய கோபுரங்களாகும்.

**9 கோபுரங்களின் விபரம்**

01. ராஜகோபுரம் (கிழக்கு)
02. பேய்க் கோபுரம் (மேற்கு)
03. திருமஞ்சன கோபுரம் (தெற்கு)
04. அம்மணியம்மாள் கோபுரம் (வடக்கு)
05. வல்லாள மகாராஜா கோபுரம்
06. கிளி கோபுரம்
07. வடக்கு கட்டை கோபுரம்
08. தெற்கு கட்டை கோபுரம்
09. மேற்கு கட்டை கோபுரம்

**ராஜகோபுரம்**

திருவண்ணாமலை ஆலயத்தில் கிழக்கு திசையில் கம்பீரமாக ராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. இந்த கோபுரத்துக்கு ராயர் கோபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. தென்னகத்தில் மிகப்பெரும் ஆன்மிக பணி செய்த மன்னரான கிருஷ்ண தேவராயர் இந்த கோபுரத்தை கட்டுவதற்கு அடித்தளம் அமைத்தார் என்பதால் அவர் பெயரால் இந்த கோபுரம் அழைக்கப்படுகிறது.

தஞ்சையை ஆண்ட ராஜராஜசோழன் தஞ்சை பெரிய கோவிலை அமைக்கும்போது கருவறை கோபுரத்தை 216 அடிகள் உயரம் கொண்டதாக அமைத்து இருந்தார். அவருக்கு பிறகு 15-ம் நூற்றாண்டில் தென்னகத்தை ஆண்ட கிருஷ்ண தேவராயர் தனது வெற்றிகளுக்கு நினைவாக திருவண்ணா மலையில் பிரமாண்டமான ராஜகோபுரத்தை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்தார். ராஜராஜன் சோழன் கட்டிய தஞ்சை பெரிய கோவில் கோபுரத்தை விட அதிக உயரம் கொண்டதாக திருவண்ணாமலை ஆலயத்தின் ராஜகோபுரம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

1550களில் அந்த ராஜ கோபுரத்தை கட்டும் பணியை கிருஷ்ண தேவராயர் தொடங்கி தீவிரப்படுத்தி இருந்தார். 135 அடி நீளம், 98 அடி அகலத்தில் அடித்தளம் அமைத்து ராஜகோபுரத்தை அவர் எழுப்பினார். ஆனால் அதன் பணிகள் முடிவதற்குள் அவர் காலம் முடிந்து விட்டது. இதையடுத்து அந்த ராஜகோபுரத்தை கட்டும் படி சிவநேசர், லோகநாதர் என்ற முனிவர்கள் தஞ்சையை ஆண்ட செவ்வப்ப நாயக்கரிடம் தெரிவித்தனர். அதை ஏற்று செவ்வப்ப நாயக்கர் திருவண்ணாமலை ராஜ கோபுரத்தை கட்டி முடித்தார்.

கிருஷ்ணதேவராயரின் ஆசைப்படி தஞ்சை பெரிய கோவில் கோபுரத்தை விட ஒரு அடி உயரமாக 217 அடி உயரத்துடன் திருவண்ணாமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. ஆங்கிரச ஆண்டு கார்த்திகை மாதம் புதன்கிழமை பௌர்ணமி ரோகிணி நட்சத்திர நாளில் அந்த ராஜகோபுரத்தில் கலசங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அந்த ராஜகோபுரம் பார்க்க பார்க்க கண்களுக்கு சலிப்பே தராத சிறப்பை கொண்டது. எவ்வளவு நேரம் பார்த்தாலும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கும்.

**2. பேய்க்கோபுரம்**

ராஜகோபுரத்திற்கு நேரே மேற்கு பகுதியில் பேய்க்கோபுரம் உள்ளது. இந்த கோபுரம் மலையை பார்த்தப்படி இருப்பதால் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. ராஜகோபுரத்தை கட்டுவதற்கு கிருஷ்ணதேவராயர் திருப்பணிகள் தொடங்கியபோதே இந்த மேற்கு கோபுரத்தை கட்டுவதற்கும் திருப்பணிகளைத் தொடங்கி நடத்தினார். இந்த கோபுரத்தின் பணிகளையும் செவ்வப்ப நாயக்கர்தான் கட்டி முடித்தார்.

இதன் உயரம் 160 அடியாகும். இந்த மேற்கு கோபுரம் பேச்சு வழக்கில் மேற்கோபுரம் என்று மாறியது. பிறகு அது பேக்கோபுரம் என்று பேசப்பட்டது. கடந்த நூற்றாண்டில் பேக்கோபுரம் என்பதை மக்கள் தவறாக பேசி பேசியே பேய்க்கோபுரம் என்று அழைக்க தொடங்கி விட்டனர். மற்றபடி பேய்க்கும் இந்த கோபுரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 9 நிலைகள் கொண்ட இந்த கோபுரத்தில் மகிசாசூரனை துர்க்கை வதம் செய்யும் காட்சி, காளை வாகனத்தில் அமர்ந்த சிவன், உமை அம்மை, பிரம்மா, முருகன், சரபேஸ்வரர், முனிவர்கள், பூதகனங்கள் இடம் பெற்றுள்ளனர்.

**3. திருமஞ்சன கோபுரம்**

திருவண்ணாமலை ஆலயத்தின் தெற்கு திசையில் திருமஞ்சன கோபுரம் அமைந்துள்ளது. அந்த காலத்தில் திருமஞ்சனம் செய்வதற்காக யானை மீது புனித நீரை இந்த வாசல் வழியாகத்தான் எடுத்து வருவதை வழக்கத்தில் வைத்திருந்தனர். எனவே இந்த கோபுரத்திற்கு திருமஞ்சன கோபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. சுமார் 150 அடி உயரம் கொண்ட இந்த கோபுரத்தை யார் கட்டியது என்று தெரியவில்லை. எந்த நூற்றாண்டில் கட்டப்பட்டது என்றும் தெரியவில்லை. ஆனால் ஏராளமான அழகு சிற்பங்களும், கல்வெட்டுகளும் நிறைந்ததாக இந்த கோபுரம் திகழ்கிறது.

ராஜகோபுரத்திற்கு அடுத்தப்படியாக இந்த கோபுரத்திற்கும் சில சிறப்புகள் உண்டு. ஆனி மாதம் நடைபெறும் ஆனி திருமஞ்சனம், மார்கழி மாதம் நடைபெறும் ஆருத்ரா தரிசனம் ஆகிய இரு விழாக்களின் போது இந்த கோபுரம் வழியாகத்தான் நடராஜரை வீதி உலாவிற்கு எடுத்து செல்வார்கள். அதுபோல வீதி உலா முடிந்த பிறகு இந்த கோபுரம் வழியாகத்தான் நடராஜரை உள்ளே அழைத்து வருவார்கள். இந்த கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள, சைவானர்கள் சிற்பம் மிகுந்த சிறப்பு பெற்றது.

**4. வல்லாள மகாராஜா கோபுரம்**

இந்த கோபுரத்தை வீர வல்லாள மகாராஜா கட்டினார். 1318-ம் ஆண்டு தொடங்கி 1340-ம் ஆண்டு இந்த கோபுரத்தின் கட்டுமானப்பணி முடிந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தகவல் உள்ளது. எனவே இந்த கோபுரத்திற்கு வீர வல்லாள திருவாசல் என்ற ஒரு பெயரும் உண்டு. ராஜகோபுரத்தை தாண்டியதும் அடுத்து வருவது இந்த கோபுரம்தான். இந்த கோபுரத்தின் கீழ் பகுதி தூண் ஒன்றில் வல்லாள மகாராஜாவின் சிற்பம் கை கூப்பிய நிலையில் இருப்பதை காணலாம்.

இந்த கோபுரத்தில் சிவன், பார்வதி, விநாயகர் சிற்பங்களுடன் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்திருக்கும் சிவபெருமான், காளை மீது அமர்ந்த சிவபார்வதி, சமணரை கழுவேற்றம் செய்யும் சிற்பங்களும் உள்ளன.

**5. கிளி கோபுரம்**

திருவண்ணாமலையில் வாழ்ந்த அருணகிரிநாதர் பற்றி சிவ பக்தர்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும். அவரோடு தொடர்புடையது இந்த கிளி கோபுரமாகும். திருவண்ணாமலை தலத்தில் உள்ள கோபுரங்களில் இது மிக மிக பழமையானதாகும். 1053-ம் ஆண்டு இந்த கோபுரத்தை ராஜேந்திர சோழன் கட்டினார். சுமார் 140 அடி உயரம் கொண்ட இந்த கோபுரம் 5 நிலைகளை கொண்டது. இந்த கோபுரத்தின் உச்சியில் கிளி சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் ஒரு வரலாறு உள்ளது.

அருணகிரி நாதர் கிளி உருவம் எடுத்து தேவலோகம் சென்ற போது அவரது உடலை சம்பந்தாண்டான் என்பவன் எரித்து விட்டான். இதனால் அருணகிரிநாதர் கிளி உருவில் அலைய வேண்டியதாற்று. அவர் கிளி உருவத்தோடு இந்த கோபுரத்தில் அமர்ந்து நிறைய பாடல்களை பாடினார். கந்தர் அனுபூதி, சுந்தர அந்தாதி ஆகிய இலக்கியங்கள் இந்த கோபுரத்தில் கிளி உருவத்தில் அமர்ந்த அருணகிரிநாதரால் பாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இந்த கோபுரத்திற்கு கிளி கோபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.

**6. தெற்கு கட்டை கோபுரம்**

திருமஞ்சன கோபுரம் அருகே 5 நிலைகளுடன் உள்ள சிறிய கோபுரம் தெற்கு கட்டை கோபுரம் என்று அழைக்கப்படுகிறது. 70 அடி உயரம் கொண்ட இந்த கோபுரத்தில் புராண நிகழ்ச்சிகளை விளக்கும் சிற்பங்கள் அமைந்துள்ளன.

**7. மேற்கு கட்டை கோபுரம்**

பேய் கோபுரத்திற்கு அடுத்தப்படியாக அமைந்துள்ள சிறிய கோபுரமாகும். 5 நிலைகளை கொண்ட இந்த கோபுரம் 70 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த கோபுரத்தில் திசை காவல் தெய்வங்கள் இடம்பெற்றுள்ளன.

**8. வடக்கு கட்டை கோபுரம்**

அம்மணியம்மன் கோபுரத்தை அடுத்து இந்த சிறிய கோபுரம் உள்ளது. 70 அடி உயரம் உள்ள இந்த கோபுரத்தில் சிவன், பார்வதி, விநாயகர், முருகன், துவார பாலகர்கள் சிற்பங்கள் உள்ளன. இந்த கோபுரத்தில் உள்ள நடன பெண்மணிகளின் சிற்பங்கள் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

**9. அம்மணியம்மாள் கோபுரம்**

திருவண்ணாமலை ஆலயத்தின் வடக்கு திசையில் இந்த கோபுரம் அமைந்துள்ளது. அம்மணிம்மாள் என்ற பெண் சித்தர் உருவாக்கிய கோபுரம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரம்

கோபுரம் என்பது தற்போதைய பரவலான வழக்கில் இந்துக் கோயில்களின் நுழை வாயில்களில் அமைந்திருக்கும் கட்டிட அமைப்பைக் குறிக்கும். பல்வேறு அளவுகளிலும் காணப்படும் இக் கோபுரங்கள், தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டிலேயே அவற்றின் உச்ச வளர்ச்சியைப் பெற்றுக் காணப்படுகின்றன. ஒரு பட்டைக்கூம்பு (பிரமிட்) போல் கீழிருந்து மேலாக ஒடுங்கிச் செல்லும் இந்த அமைப்பு, ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட தளங்களாகக் காட்சி தருகின்றன. ஒரு தளம் கொண்டவை முதல் 12 தளங்கள் கொண்ட கோபுரங்கள் வரை தமிழ் நாட்டில் உள்ளன. இது போலவே ஒரு கோயிலில் இருக்கக்கூடிய கோபுரங்களின் எண்ணிக்கையும் பலவாறாகக் காணப்படுகின்றன. ஒரேயொரு கோபுரத்தைக் கொண்ட கோயில்களும், 16 கோபுரங்களைக் கொண்ட கோயில்களும் உள்ளன.

கோயில்களில் பிரமிட் வடிவில் உயர்ந்து நிற்பனவெல்லாம் கோபுரங்கள் அல்ல. வட நாட்டுக் கோயில்களிலும், தமிழ் நாட்டின் ஆறு தொடக்கம் 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிகளில் கட்டப்பட்ட கோயில்களிலும் உள்ள உயர்ந்த பிரமிட் வடிவ அமைப்புக்கள் விமானங்கள், அல்லது சிகரங்கள் எனப்படுகின்றன. இவை கருவறைக்கு மேலேயே கட்டப்பட்டிருக்கும். ஆனால் கோபுரங்கள் கோயிலைச் சூழவுள்ள சுற்று மதில்களில் அமைந்துள்ள வாயில்களில் கட்டப்பட்டிருக்கும். தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில் ஆகியவற்றில் பெரிய அளவில் காட்சி தருபவை விமானங்கள் ஆகும்.

கோபுரம் என்ற சொல் முற்காலத்தில் கோயில் நுழைவாயில் அமைப்புக்களை மட்டுமன்றி, நகரங்கள், அரண்மனைகள் ஆகியவற்றின் வாயிலில் கட்டப்பட்ட அமைப்புக்களையும் குறித்தது. இன்று இது கோயில் கோபுரங்களையே பெரிதும் குறித்தாலும், உயரமான பிற கட்டிட அமைப்புக்களையும் கோபுரம் என்ற பெயர் கொண்டு அழைப்பதுண்டு. மணிக் கோபுரம், மணிக்கூட்டுக் கோபுரம், ஈபெல் கோபுரம், பெட்ரோனாஸ் கோபுரங்கள் போன்ற பெயர்கள் இதற்கு எடுத்துக் காட்டுகள் ஆகும். இக் கட்டுரை கோயில் கோபுரங்களைப் பற்றியது ஆகும்.

**சொற்பிறப்பு**

தமிழில், கோபுரம் என்னும் சொல்லின் தோற்றம் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. தேவநேயப் பாவாணர் போன்ற சில அறிஞர்கள் இது ஒரு தூய தமிழ்ச் சொல்லே என்கின்றனர். ஆனால் வேறு சிலரோ இது சமஸ்கிருதம் அல்லது வேறு பிராகிருத மொழியிலிருந்து தமிழுக்கு வந்தது என்கின்றனர். கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட மகாபாரதம் போன்ற சமஸ்கிருத நூல்களில் கோபுரம் என்ற சொல் ஆளப்பட்டிருக்க, சங்க காலத் தமிழ் நூல்களிலோ அல்லது பிற்பட்ட சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலோ கோபுரம் என்ற சொல் காணப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். வேதகாலத்தில் பசுக்களை அடைத்து வைக்கும் பட்டிகளுக்கு மூங்கிலால் வேலியிடப்பட்டு அதன் வாயிலில் மூங்கிலாலேயே ஒரு வாயில் அமைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கோ என்றால் பசு, புரம் என்பது காத்தல் என்னும் பொருளுடையது இதனால் பசுக்களைக் காக்கும் இடத்தின் வாயில் கோபுரம் எனப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர், அரண்மனை, நகரங்கள் முதலியவற்றின் வாயில் அமைப்புக்களையும் இப் பெயராலேயே அழைத்தனர். காலப்போக்கில் கோயில்களின் வாயில் கட்டிட அமைப்புக்களையே கோபுரம் என்னும் சொல் குறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**தமிழ் நாட்டின் தொடக்க காலக் கோபுரங்கள்**

காஞ்சி கைலாசநாதர் கோயில் கோபுரம். தற்காலக் கோபுரத்தின் மிக எளிமையான வடிவம் தமிழ் நாட்டில் காணப்படும் காலத்தால் முந்திய கோபுரம், பல்லவர் காலத்தைச் சேர்ந்த காஞ்சிபுரம், கைலாசநாதர் கோயிலில் உள்ள கோபுரம் ஆகும். அக்காலக் கோயில்களில் கோபுரம் ஒரு முதன்மையான கூறு அல்ல. முக்கியத்துவத்திலும் அளவிலும் முதன்மையாக இருந்தது கருவறைக்கு மேல் அமைந்த விமானமே. எனவே கைலாசநாதர் கோயிலிலும் கோபுரம் மிகவும் சிறிதாகவே காணப்படுகிறது. கோயில் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்து சோழர் காலத்தில் மிகப் பெரிய கோயில்கள் அமைக்கப்பட்டபோதும், விமானமே நெடிதுயர்ந்து காணப்பட்டது. கோபுரங்கள் ஒப்பீட்டளவில் சிறிதாகவே இருந்தன. ஒரு கோயிலில் இறைவன் உருவம் வைக்கப்பட்டுள்ள கருவறையே முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதால் அதனை அமைப்பு அடிப்படையிலும் முதன்மை பெறச் செய்தது புரிந்துகொள்ளத் தக்கதே. இதன் காரணமாகவே சிற்பிகளும் தமது திறமைகளை விமானத்தை உருவாக்குவதிலேயே பெரும்பாலும் காட்டினர்.

**பாண்டியர் காலம்**

ஏறத்தாழ கி.பி 1100 அளவில் தொடங்கிய பிற்காலப் பாண்டியர் காலத்தில் இந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. கருவறையைச் சுற்றியிருந்த பிற கட்டிட அமைப்புக்களிலும் கவனம் செலுத்தப்பட்டது. சிறப்பாக வாயில் கோபுரங்கள் முதன்மை பெறத்தொடங்கின. இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதற்கு இந்தியக் கட்டிடக்கலை பற்றிய நூலொன்றை எழுதிய பேர்சி பிரவுண் என்பவர் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். தமிழ் நாட்டின் பலபகுதிகளிலும் ஏராளமான சிறிய கோயில்களுட் பல, கட்டிடக்கலை அடிப்படையில் சிறப்பு வாய்ந்தனவாக இல்லாவிட்டாலும், புனிதத்தன்மை கொண்டனவாகக் கருதப்பட்டன. இந்த உணர்வு காரணமாகப் பெரிதாக்குவதற்காக அவற்றை இடிப்பது கூடாது எனக் கருதப்பட்டது. இதனால் கருவறையை அவ்வாறே இருக்கவிட்டு அதனை அண்டி வேறு அமைப்புக்களை உருவாக்கிக் கோயிலை விரிவாக்கத் தலைப்பட்டனர். கோயிலின் முக்கியத்துவத்தின் வெளிப்பாடாக அதனைச் சூழப் பெரிய மதில் சுவர்கள் எழுப்பப்பட்டன. வாயில்களிலே கோபுரங்களும் விமானத்தையும் தாண்டிப் பெரியவையாக வளரலாயின. கோபுரங்களின் உயரம் வளர்வது கோயிலின் பெருமையை உயர்த்தியது மட்டுமன்றி அதனைக் கட்டுவித்தவரது அதிகார பலத்துக்கும் சாட்சியாக அமைந்தது.

நன்றி - விக்கிபீடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப்பர் கதிர்காமர்
## ஸ்தாபகர் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானம்

**ச. குமாரசூரியர்,**
கதிர்காமர் வழித்தோன்றல்.

யாழ்ப்பாணக் குடியேற்றம் கி.பி 13 ம் நூற்றாண்டின் நடுப்பகுதி என சரித்திர ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அரசியல் தோன்றிய காலம் முதல் ஆரிய மன்னன் யாழ்ப்பாணத்து அரசியலுக்கு தொண்டை மண்டலத்தையே படி எடுக்கத் தொடங்கினான் சிங்கை ஆரிய சக்கரவர்த்தி குடிசனம் குறைந்த இந்த நாட்டில் அனேக பிரசைகள் வாசம் செய்ய வேண்டும் என்று விரும்பி மந்திரி புவனேகபாகுவுடன் உரையாடி இங்கு தமிழ்க்குடிகளை அனுப்பச் சொல்லி தமிழ் அரசர்களுக்கு கடிதம் அனுப்பினான் இவ்வழைப்பின் பெயரில் வந்தவர்கள் திருநெல்வேலி, மயிலிட்டி, தெல்லிப்பழை, இணுவில், பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்புரம், கோயிலாக்கண்டி, இருபாலை, நெடுந்தீவு தேசிய இடங்களில் குடியேறினர் குடியேறியவர்களில் மூவரில் ஒருவர் கனகராயன் செட்டி சீர்மாலை உடையவனும் வேளான் செட்டியுமாகிய கனகராயனின் வாவி நகர் வேளான் தலைவனும் மேளிக் கொடி உடையவனும் மன்மத சொரூபனும் முத்தமிழ்ப் புலமையிற் சிறந்தவனுமாகிய சம்பக மாப்பாணனையும் அவன் உறவினராகிய சந்திரசேகர மாப்பாணனையும் தெல்லிப்பள்ளி என வழங்கும் தல்லிப்பள்ளியிலே இருத்தினான் (மாருதப்பிரவாக வல்லி தனது நோய் நீங்கி இளமையும் அழகும் உடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கிய இடம் இதுவாதலின் தல்லிப்பள்ளி எனப்பட்டது தல்லி- இளமையுடையவள் பள்ளி- சிற்றூர் (யாழ்ப்பாண சரித்திரம் முத்துத்தம்பிப்பிள்ளை பக்கம் 34) தெல்லிப்பழையில் ஒரு குறிச்சி, வவுணாவத்தை கனகராயன்பள்ளு பக்கம் வள்ளுவத்தை (பிராமணர் தோட்டம் எனப் பொருள்படும் சிங்களப் பெயர்) கனகராயன் செட்டி அரசின் முடிசூட்டு விழாக்காலங்களில் துலாபாரம் இவரது பார்வையில் நடைபெற்றது. இவர் காஞ்சியில் உள்ள கோயில் முதலாளிகளில் ஒருவர் இந்திரன், புதன் வழிபட்டு பேறுபெற்ற தலம் திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட தலம் இக் கனகராயன் பரம்பரையில் கிட்டத்தட்ட 350 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர் தான் எங்கள் கதிர்காமர்

கதிர்காமர் காசி யாத்திரையால் வந்து (கதிர்காமரின் காசி யாத்திரை வரலாறு 24.01.2012 அருள் ஒளி மகாகும்பாபிஷேக சிறப்பு மலரில் பிரசுரமாகி உள்ளது. இவ் வரலாறு மாவை ஆதீனம் சிவஸ்ரீ சண்முகநாதக்குருக்களால் எழுதப்பட்டது. தனது காணியில் நடை தரை தற்போதைய கோவில் அமைவிடம் அவ் இலுப்பைத் தோப்பில் இளைப்பாறியிருந்தார் திருவருள் கிருபையில் அவர் முன் ஒரு சோதி தோன்றி கொண்டு வந்த துர்க்கா சக்கரத்தை அங்கே ஸ்தாபிக்குமாறு ஆணையிட்டது அவ் ஆணையை சிர மேல் தாங்கி மரத்தடியில் சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினார். துன் இயலுமழவும் பூசை செய்த கதிர்காமர் வயது முதிர்ச்சியில் தளர்வுற்றார் அந்நாளில் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஞ்சிபுரத்தில் இருந்து ஒரு அந்தணர் வருவார் என்று புலப்பட்டது. அவ்வாறே ஒரு அந்தணர் வந்தார் தனக்கு விளைந்த குறிப்பின் வண்ணம் பூசையை அவரிடம் ஒப்புவித்தார். சில காலம் அந்தணர் பூசையை தரிசனம் செய்து கொண்டு இருந்துவிட்டு ஜீவ சமாதியடைந்தார் காஞ்சிபுரத்தில் இருந்து வந்த பிராமணர் பரம்பரையே 1981ம் ஆண்டு வரை குமாரசாமிக்குருக்களின் மறைவு வரை பரம்பரையாக பூசை செய்தனர் இக்குருக்கள் பரம்பரை கதிர்காமர் பரம்பரை காஞ்சிபுரத்தில் தற்போதும் இருக்கிறார்கள் வளகுலத்தையில் இருந்த கதிர்காமர் பரம்பரையினரே கோயில் முகாமையாளராக இருந்து நிர்வகித்து வந்தனர் அவர்களில் கதிரேசஉடையார் கோப்பாயில் கலியாணம் செய்து அங்கிருந்தார் இவர் மறைவின் பின் அவர் மகன் நாகநாதன் இரண்டாம் போர்க்காலத்தில் பிரித்தானியப் படையில் அதிகாரியாக இருந்தார் தற்போதைய நிர்வாக சபையில் உள்ள திருநாவுக்கரசின் தந்தை கோப்பாயில் இருந்து வந்து பராமரித்து கஷ்டம் என்று கதிர்காமர் பரம்பரையில் ஆறு பேரையும் தெல்லிப்பழை மாவிட்டபுரம் பகுதியில் இருவராகவும் 10 உறுப்பினர்களை நியமித்து கோவிலை பொதுச்சொத்து ஆக்கி நிர்வாகசபை நியமனம் இல 2851 22/6/49 செய்துள்ளார்.


மேல் குறிப்பிட்டவைக்கு ஆதாரங்கள்

01. யாழ்ப்பாண வைபவ கௌமுகி
02. யாழ்ப்பாண சரித்திரம்
03. யாழ்ப்பாண வைபவமாலை
04. தண்டிகைக் கனகராயன் பள்ளு


**வளர்பொற் கனமணி திருமா ளிகையினை**
**வலம்வந் தலமரும் வரைநில்லா**
**அளவிற் பெருகிய ஆர்வத் திடையெழும்**
**அன்பின் கடல்நிறை உடலெங்கும்**
**புளகச் செறிநிரை விரவத் திருமலி**
**பொற்கோ புரமது புகுவார்முன்**
**களனிற் பொலிவிடம் உடையார் நடநவில்**
**கனகப் பொதுஎதிர் கண்ணுற்றார்**

அழகு வளர்கின்ற பொன்மாளிகையை வலமாக வந்து, வருத்தம் தருவதும் ஒரெல்லைக்குட்படாது பெருகியதுமான ஆர்வத்திடை எழுகின்ற அன்பான கடல் நிறைந்த மேனி முழுதும் மயிர்ப்புளகம் மிகுந்து கலக்க, திருமிகுந்த பொன்வயத்ததாய கோபுரத்தில் உள்ளே புகும் நாயனார், கழுத்தில் விளங்கும் நஞ்சை யுடைய கூத்தப் பெருமான் நடமாடுகின்ற பொன்னம்பலத்தை எதிரே கண்டார்.

**- பன்னிரண்டாம் திருமுறை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையார்

சைவம் வளர்த்த 63 நாயன்மார்களுள் பெண்களுக்கும் இடமுண்டு. அவர்களுள் தலையாயவர் காரைக்கால் அம்மையார். பொது யுகத்திற்குப் பின் 300- 500 காலப்பகுதியில் வாழ்ந்தவர் இவர் என அறிஞர்கள் கருதுகிறார்கள். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராலேயே அறியப்படும் இவரது இயற்பெயர் புனிதவதியார் ஆகும். நாயன்மார்களில் காலத்தால் மூத்தவர் இவர். இறைவனால் "அம்மையே" என்று அழைக்கப் பெற்ற பெருமை உடையவர் என்பர்.

இவர் இயற்றிய பாடல்கள் - அற்புதத் திருவந்தாதி 101 பாடல்கள், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு (20 பாடல்கள்), திரு இரட்டை மணிமாலை 20 பாடல்கள். தேவார காலத்துக்கு முந்தி இயற்றப்பட்ட இவரது பதிக முறையைப் பின்பற்றி, பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் அமைந்தன. இவரது சரிதம் இதோ...

காரைக்காலில் தனதத்தன் எனும் வணிகர் குலத்தலைவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு புனிதவதி என்று பெயர் சூட்டினார்கள். இவர் இளவயதிலேயே சிவபெருமானிடம் பக்தி கொண்டிருந்தார். சிவனடியார்களை வணங்கி உபசரிப்பார். இவருக்கு திருமண வயது எட்டியது. நாகப்பட்டினத்தில் நிதிபதி எனும் வணிகத்தலைவன், தன் மகன் பரமதத்தனுக்கு புனிதவதியைத் திருமணம் செய்ய விரும்பினான். அதன்படி தனதத்தனுடன் பேச, புனிதவதியார்-பரமதத்தன் திருமணம் நடந்தேறியது. தனதத்தன் தன் மகளைப் பிரியாமல் இருப்பதற்காக, காரைக்காலிலே அவர்களை குடியமர்த்தினான். பரமதத்தன், வாணிபத்துறையை பெருக்கி புனிதவதியாருடன் இல்லறத்தை இனிது நடத்தினான்.

ஒருநாள் பரமதத்தனைக் காணவந்த வணிகர்கள், அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தனர். பரமதத்தன் அவற்றை வீட்டிற்குக் கொடுத்தனுப்பினான். அப்பழங்களை புனிதவதியார் வாங்கி வைக்கும்போது ஒரு சிவனடியார் பசியுடன் வந்தார். அவருக்கு புனிதவதியார், அமுது படைத்தார். அப்போது தன் கணவர் கொடுத்த இரு மாங்கனிகளுள் ஒன்றை சிவனடியாருக்கு படைத்தார். சிவனடியார், புனிதவதியாரை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

பரமதத்தன் மதியம் உணவருந்த விட்டிற்கு வந்தான். புனிதவதியார் அவருக்கு அமுது பரிமாறி, மீதமுள்ள ஒரு மாங்கனியையும் வைத்தார். பரமதத்தன் மாங்கனியை ரசித்து சாப்பிட்டான். கனியின் சுவையால் கவரப்பட்டு "மற்றுமொரு கனியையும் கொண்டு வா" என்றான். உடனே சமையலறை சென்ற புனிதவதியார், உற்றவிடத்து உதவும் பெருமானே என சிவபெருமானை வேண்ட, உடனே புனிதவதியாரின் கையில் ஒரு மாங்கனி வந்தது. அந்தக் கனியை பரமதத்தனுக்கு படைத்தார்.

முன்சாப்பிட்ட கனியைவிட மிகச் சுவையாய் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தான் பரமதத்தன். உடனே தன் மனைவியிடம் இதற்கான காரணத்தைக் கேட்டான். புனிதவதியாரோ, கணவனிடம் உண்மையை மறைத்தல் தவறென்று நடந்தது அனைத்தையும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமதத்தனுக்கோ ஆச்சரியம். "சிவனருளா! அப்படியாயின் இன்னொரு கனி கொண்டுவா பார்ப்போம்!" என்றான். உடனே புனிதவதியார் மீண்டும் இறைவனை வேண்ட, இறைவன் மேலும் ஒரு மாங்கனியை அருளினார். இதனைக் கண்ட பரமதத்தன், "இவள் தெய்வம். இவளை விட்டு நீங்குதல் வேண்டும்" என அஞ்சி, புனிதவதியாரோடு தொடர்பின்றி வாழ்ந்து வந்தான். சில நாட்கள் கழித்து வாணிபத்திற்காக பாண்டிய நாடு சென்றான். அங்கு வாணிப குலப்பெண்ணை மணந்து, ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தான். அந்தப் பெண் குழந்தைக்கு, புனிதவதி எனப் பெயரிட்டு வளர்த்தான்.

பரமதத்தன் பாண்டிய நாட்டிலிருப்பதை அறிந்த உறவினர்கள் பரமதத்தனுடன் புனிதவதியாரை சேர்த்து வைக்க ஒரு பல்லக்கில் ஏற்றி பாண்டிய நாட்டுக்கு அனுப்பினார்கள். புனிதவதியாரின் வரவை அறிந்த பரமதத்தன் தன் மனைவி, மகளுடன் வந்து வணங்கி, உம் திருவருளால் இனிது வாழ்கிறேன். இக்குழந்தைக்கு உமது திருநாமத்தையே சூட்டியுள்ளேன் என்று கூறி அம்மையார் காலில் விழுந்து எழுந்தான்.

இதனைக் கண்ட அவர் சுற்றத்தினர், "என்ன இது? உன் மனைவியை ஏன் வணங்கினாய்?" என கேட்க, "இவள் தெய்வம். இவர் மானிடரே அல்ல" என நடந்தது அனைத்தையும் விளக்கினான் பரமதத்தன். புனிதவதியார் உடனே இறைவனிடம், "ஈசனே, இவருக்காக தாங்கிய மனித உடலை எடுத்துக் கொண்டு, பேய் வடிவை அருள்வாயாக!" என வேண்டி, பேய் உருவம் பெற்றார். இவருக்கு திருக்கயிலாயத்தைக் காண வேண்டும் எனும் ஆவல் உண்டானது. அதனால் கயிலையை நோக்கி, காலால் நடப்பதைத் தவிர்த்து, தலையால் கயிலை மலை மீது ஏறினார். இதைக் கண்ட உமாதேவியார் சிவனிடம் கேட்க, இவள் நம்மைத் துதிக்கும் பொருட்டு இப்பேய் உருவை வேண்டி பெற்றார் என்று கூறினார்.

பின்னர் புனிதவதியாரைப் பார்த்து. "அம்மையே வா" என்றழைத்தார். இறைவனின் திருவடியின் கீழ் எப்போதும் இருக்க வேண்டும் என வேண்டினார் புனிதவதியார். "அம்மையே, தென்திசையில் திருவாலங்காடு எனும் ஊரில் நாம் நடனம் புரிவோம். அதைக் கண்டு இன்புற்று நம்மைப் பாடிக்கொண்டு இருப்பாயாக!" என்று அருளினார்.

உடனே திருக்கயிலையை விட்டு, தலையினால் நடந்து சென்று திருவாலங்காட்டை அடைந்தார். அங்கு ஆண்டவனின் திருநடனத்தைக் கண்டு வணங்கி, "கொங்கை திரங்கி, "எட்டி இலவம்" எனும் இரண்டு மூத்த திருப்பதிகங்களைப் பாடினார். பின்னர் இறைவன் திருவடியின் கீழ் என்றும் சிவ ஆனந்தத்தை நுகரும் பேறு பெற்றார். அன்றுமுதல் இவர் "காரைக்காலம்மையார" என்று அழைக்கப்படுகிறார்.

காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வெறும் கதையல்ல. அவர் இயற்றிய தமிழ் நூல்கள் சாகாவரம் பெற்றவை. இறைவன் மீதான பக்தியில் தன்னை உருக்கிக் கொண்டு வாழ்ந்தவர் அவர் என்பதும், அதற்காகவே இல்லற வாழ்வைத் துறந்தவர் என்பதும், நாம் புரிந்துகொள்ள வேண்டிய சேதிகள்.

**குருபூசை: பங்குனி சுவாதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா எனும் நாமம்

-திருமுருக கிருபானந்த வாரியார்

**'ஊரிலான் குணங் குறியிலான் செயலின் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்'**

என்பது கந்த புராணத் திருவாக்கு. இறைவனுக்கு ஊர், குணம், அடையாளம், செயல், பேர், காலம், பற்றுக்கோடு, போக்கு, வரவு, உயர்வு, ஒப்பு முதலிய ஒன்றும் இல்லை. பேரும் ஊரும் இல்லாத பெருமான் ஆன்மாக்களின் பொருட்டு ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பேரும் உருவும் தாங்கி வருகின்றான். இத்திருவருளின் இயல்பை உள்ளவாறு உணராத புலவர்கள் இறைவனுக்கு நாம ரூபம் நம்மால் கற்பிக்கப்பட்டன என்பார்கள்.

மூவாண்டுடைய சீகாழிப்பிள்ளையார் அழுதலும் அவருடைய பண்டைத் தவ வலிமையால் இறைவன் திருவுருவுடன் காட்சி தருகின்றான். வெள்ளை விடையும், பவளமலை போன்ற திருவுருவும், அருகில் மரகதக் கொடி போன்ற அம்பிகையும், பிறையணிந்த திருமுடியும், மான்மழு ஏந்திய திருக்கரங்களும், நீல கண்டமும், தோடணிந்த தாழ்செவியும், கருணை பொழியும் மலர்க் கண்களும், நீறணிந்த திருமேனியுங் கண்டு, அச்சிறியபெருந்தகையார் "தோடுடைய செவியன்" என்று பாடுகின்றார். அத்திருமேனியை மூவாண்டுக் குழந்தை கற்பனை புரியவில்லை. கண்ட காட்சியைக் கழறுகின்றது.

சூரபன்மனுக்குச் சிங்கமுகன் கூறுகின்ற அறவுரையை கந்த புராணத்தில் காண்க:

**வாலிதா மதிச் சடிலமும் பவளமால் வரையே**
**போலு மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்**
**நீல மாமணிக் கண்டமும் கொண்டு நின்றனனால்**
**மூலகாரணம் இல்லதோர் பராபர முதல்வன்**
**தன்னை நேரிலாப் பரம் பொருள் தனியுருக்கொண்ட**
**தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி**
**முன்னை ஆருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்**
**பின்னை வீடுபேறருளுவான் நினைந்த பேரருளே.**

இவ்வண்ணம் சிவமூர்த்தி ஆன்மாக்களின் நலன் கருதி எடுத்துக்கொண்ட திருவுருவங்கள் பல. அவற்றுள் மிகவும் தொன்மையானது ஆறுமுக வடிவம்.

**'அந்திக்கு நிகழ்மெய்யண்ணல் அருள் புரிந்தறிஞராயோர்**
**சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்'** -கந்தபுராணம்.

**'பழைய வடிவாகிய வேலா'** -திருப்புகழ்.

தேவர்கள் துயர்தீர்க்கும் பொருட்டு, வடிவும் வண்ணமும் இல்லாத முடிவிலாப் பரம்பொருள், மூவிரு முகங்களும், ஆறிருபுயங்களும், மூவாறு நயனங்களும் அமைந்த திருமேனி கொண்டு அருள்புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அருவமும் உருவும் ஆகி அனாதியாய் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய'**

எம்பிரான் சரவணப் பொய்கையில் இத்திருமேனி கொண்டு உதிக்கு முன்னரேயே முருகன் என்ற திருநாமத்தை ரடையவன் என்பதை இப்பாடலால் அறிக.

**'முருகன் வந்து உதித்தான்!'**

"சாத்தான் வந்தான்" என்றால், வந்தது பின்னர், சாத்தான் என்ற பெயர் முன்னர் என்பது விளங்குந்தானே. மிகப் பழமையான் திருநாமம் முருகன் என்பது. முருகனுடைய திருநாமங்கட்கெல்லாம் சிவபெருமான் உமாதேவியிடம் காரணங்கள் கூறுகின்றார். "இன்ன காரணத்தால் இன்ன பெயர் அமைந்தது" என்று கூறுகின்றார்.

**'ஆறுமுகங் கொண்டதால் சண்முகன்'**
**'கங்கையில் தவழ்ந்ததால் காங்கேயன்'**
**'கார்த்திகை மாதர் வளர்த்தனால் கார்த்திகேயன்'**
**'ஆறு திருவுருவும் ஒன்று கூடியதனால் கந்தன்'**
**'மயிலை வாகனமாக உடையவனாதலால் விசாகன்'**

இன்ன காரணத்தால் முருகன் என்ற நாமம் அமைந்தது என்று அந்த வரிசையில் கூறவில்லை. இதனால் அத்துணைத் தொன்மை வாய்ந்த திருநாமம் முருகன் என்பதைத் தெற்றென உணர்க.

எம்மொழிக்கும் முதல்வனான முருகன் செம்மொழியான தமிழுக்குச் சிறப்புடைத் தலைவன் ஆவான். தமிழில் மூன்று இனம் உண்டு. அவை வல்லினம், மெல்லினம், இடையினம் எனப்படும். இவற்றுள் மெல்லினம் மென்மையும், இனிமையும் உடையது. ஆதலால்- மெல்லினத்தில் ஒரு எழுத்து "மு" இடையினத்தில் ஒரு எழுத்து "ரு"வல்லினத்தில் ஒரு எழுத்து "கு" -என "முருகு" என்று மூவினத்தில் மூவெழுத்தைக்கொண்டு எந்தை கந்த வேளின் திருநாமம் அமைந்துள்ளது.

ஆண்டவன் ஆறு ஆகாரங்கட்கும் ஆறு சமயங்கட்கும் ஆறு அத்துவாக்களுக்கும், ஆறுபடை வீடுகட்கும் அதிபன். "முருகா" என்ற பெயரும் ஆறு பொருள்களைக் கொண்டது. தெய்வத்தன்மை, அழகு, இளமை, மகிழ்ச்சி, மணம், இனிமை என்ற ஆறு தன்மைகளையும் உடைய சொல் "முருகு".

**'முருகுகள் இளமை நாற்றம்**
**முருகவேள் விழா வனப்பாம்'**

என்று பிங்கள நிகண்டு கூறுகின்றது.
இதனைப் புலப்படுத்தவே அருணகிரிநாதர்,

**'மெய்மைகுன்றா மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்'**

என்று கூறுகின்றார். இப்பாடலில் முருகா என்பது ஒருமை. நாமங்கள் என்பது பன்மை. பல நாமங்களின் பொருள்களையுடையது "முருகா" என்ற நாமம் என்பதை இப்படி உணர்த்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் பல்லாயிரம் நாமங்கள் கொண்டவன். அவற்றுள் சிறந்த நாமம் மூன்று "முருகன், குமரன், குகன் என்பவை. இம்மூன்றனுள்ளும் மிகச்சிறந்தது முருகன் என்ற நாமம்.

**'முருகன் குமரன் குகன் என்று மொழிந்**
**துருகுஞ் செயல் தந்துணர் வென்றருள்வாய்'**

-என்று கந்தரநுபூதியில் கூறுகின்றார்.

உலகமெல்லாம் அஞ்சுகின்ற முகமாகிய கூற்றுவனுடைய கோர்முகந் தோன்றுகின்றபோது "முருகா" என்றால் அப்பனுடைய் ஈரமுகம் ஆறுந்தோன்றும். அக்கூற்றுவனுக்கும் நமக்கும் ஒருவேளை போர் நிகழுமாயின் அப்போது "முருகா" என்று ஓதினால் அஞ்சேல் என அவனுடைய அயில்வேல் தோன்றும். ஒருகால் "முருகா" என நினைத்தாலும் போதும், அக்கருணாமூர்த்தியின் இருகாலும் தோன்றும்.

"முருகா முருகா" என்று ஓதினால் போதும். "முருகா" என்று கூறக் கூடாது ஓத வேண்டும். கூறுவது வேறு ஓதுவது வேறு. கூறுவது "வாக்கு மட்டும் தொழில் படுவது. ஓதுவது" உணர்வுடன் காதலாகி உள்ளங் கசிந்து கண்ணீர் மல்குவது.

**'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்'** - ஞானசம்பந்தர்.

**'அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்**
**வெஞ்சமரந் தோன்றில் வேல் தோன்றும்- நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்**
**முருகா என்றோதுவார் முன்'**

"ஓம்" என்ற பிரணவ எழுத்து "அ- உ- ம்" என்ற மூன்று எழுத்துக்களின் சம்மேளனம். "அ" கரத்தில் தொடங்கி, "உ"கரத்தில் மடங்கி "ம"கரத்திலே ஒடுங்குகின்றது.

அ - சிருஷ்டிக்கின்றது
உ - இரட்சிக்கின்றது
ம - சம்மரிக்கின்றது (சம்ஹாரம் ஸ்ரீ ஒடுக்கம்)

இந்த மூன்றில் சிருஷ்டி எழுத்தை பார்க்கிலும், சம்மார எழுத்தாகிய மகரத்தைப் பார்க்கிலும், ரக்ஷக எழுத்தாகிய உகரந்தான் உயர்ந்தது. நாம் கடவுளை நோக்கி, "என்னை உண்டாக்குவாய். என்னை ஒடுக்கிக் கொள்வாய்" என்றா வேண்டுகின்றோம்? இல்லை "இறைவனே என்னைக் காப்பாற்று" என்றுதானே வேண்டுகின்றோம்? எனவே காத்தலுக்கு உரிய எழுத்தாகிய உகரத்தையே பெரிதாகக் கொள்ள வேண்டும்.

குகையில் கற்முகி என்ற பூதத்தால் அடைப்பட்ட ஆயிரம் பேரையும் காப்பாற்று என்று பாடிய நக்கீரர், ரட்சக எழுத்தாகிய உகரத்தை முதலில் அமைத்து "உலகம் உவப்ப வலனேர்பு திரி தரு" என்று தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியடியார் அறுபத்து மூவர்களையும், தொகையடியார் ஒன்பதின்மார்களையும், சிவபெருமான் காத்தருளிய வரலாற்றைக் கூற வந்த கம்பநாடரும் உகரத்தை முதலில் அமைத்தே "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்று ஆரம்பிக்கின்றார்.

அ-உ-ம என்ற மூன்றில் ரக்ஷக எழுத்தை முதலில் வைத்துச் சொன்னால், உமஅ ஸ்ரீ உமா என்று ஆகின்றது. இது அம்பிகையினுடைய உயர்ந்த திருநாமம். இது காறும் கூறியவாற்றால் ஒருவாறு உகரத்தின் பெருமையை உணர்ந்திருப்பீர்கள். இனி முருகு என்ற திருநாமத்தைச் சிந்தியுங்கள்.

மகர மெய்யில் உகர உயிர் ஏறி "மு"
ரகர மெய்யில் உகர உயிர் ஏறி "ரு"
ககர மெய்யில் உகர உயிர் ஏறி "கு"

"முருகு" என்ற மூன்றெழுத்துக்களிலும் காத்தற்குரிய உகரமே ஊடுருவி நின்று இம்முருக மந்திரமே அகில உலகங்களை காத்தருளும் திருநாமம் என உணர்த்துகின்றது. இப்படி மூன்று உகர உயிர் அமைந்த வேறு மந்திரம் இல்லை என்பதும் ஒரு தலை. ஆதலால் முருகா என்று ஓதுவார் மும்மை நலங்களும் பெற்று உயர்வு பெறுவார்கள்.

ஒரு மன்னன் வேட்டையாடினான். விலங்கின் மீது விடுத்த கணை குறி தவறி ஒரு அந்தண முனிவரைக் கொன்றுவிட்டது. அதனால் பிரம்ம அத்தி தொடரப் பெற்ற மன்னன் பெருந்துயர் உழந்தான். இடர்களையும் சாதனத்தை நாடி கங்கைக் கரைக்கு வந்தான். கங்காநதி தீரத்தில் ஒரு மாதவ முனிவர் சிறந்த தவத்தில் இருந்தார். அரசன் அவரிடம் போனான்.

அரசன் வந்த சமயத்தில் ஆஸ்ரமத்தில் அருந்தவர் இல்லை. மாதவருடைய மைந்தன் இருந்தான். அச்சிறுவன் அரசனை வரவேற்று, "வேந்தே! எங்கு வந்தாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று வினாவினான். "குழந்தாய், உன் பிதா எங்கே?" "அரசே! அவர் வெளியே சென்றிருக்கின்றார். நின் மனதில் என்ன குறை? உன் வாட்டத்திற்குரிய காரணத்தைக் கூறு". "குழந்தாய்! நான் அபுத்தி பூர்வமாக் ஒரு முனிவரைக் கொன்றுவிட்டேன். பிரமகத்தி என்னைத் தொடர்ந்து வருத்துகின்றது. அது தீரும் சாதனத்தைக் கேட்க வந்தேன்".

"இவ்வளவு தானே? இதற்கென்ன பெரிய ஆலோசனை? நான் சொன்னபடி கேள். பிரமகத்தி தீரும். கங்கையில் நீராடு வடதிசை நோக்கி நில் முருகவேளை மனக் கண்ணால் கண்டு, காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி, மூன்று முறை "முருகா" "முருகா" முருகா" என்று ஓது. பிரமகத்தி நீங்கும்" என்று அம்மைந்தன் கூறினான்.

மன்னவன் அதுபடி ஓதி பிரமகத்தி நீங்கப் பெற்றான். முனி மகனை வணங்கி மகிழ்ச்சியுடன் சென்றான். பின்னர் முனிவர் பெருமான் வந்தார். தேரின் சக்கரங்கள் வந்துசென்ற சுவட்டினைக் கண்டார்.

**'மகனே! இங்கே யார் வந்தது?'**

**'அப்பா! இந்நாட்டினை ஆளும் வேந்தர் வந்தார்'.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கண்ணே, எதன் பொருட்டு வந்தார்?'**

"தந்தையே! பிரமகத்தி தீர வழி கேட்டார். அதற்கு நான் நீராடி உள்ளம் உருகி மும்முறை முருக மந்திரத்தைக் கூறுமாறு உபதேசித்தேன். அவ்வண்ணமே செய்து அனுகூலம் அடைந்து அவர் அகன்றார்". இதனைக் கேட்ட முனிவருக்கு விழி சிவந்தது. "மூடனே! நீ என் மகனா? என்ன காரியஞ் செய்தாய்? ஏன் உனக்கு இந்த மந்த புத்தி? உனக்கு ஒருசிறிதும் முருக பக்தியில்லையே. பெருந் தவறு செய்துவிட்டாயே" என்று கூறிக் கடிந்தார்.

அம்மைந்தன் நடுநடுங்கினான். தந்தையின் தாள் மலர்மீது பலகாலும் வீழ்ந்து பணிந்தான். "அப்பா! நான் என்ன பிழை செய்தேன்? நம் குலதெய்வம் குமாரக் கடவுளின் திருமந்திரத்தைத் தானே ஓதச் சொன்னேன்?"

"மகனே, ஒரு முறை "முருகா" என்றால் கோடி பிரமகத்திகள் தீருமே? நீ மூன்று முறை சொல்லச் சொன்னாயே. நீ முருக நாமத்தின் பெருமையையும் நன்மையையும் நன்கு உணரவில்லை. மூன்று முறை சொன்னால்தான் பிரமகத்தி நீங்குமா? அம்மந்திரத்தின் ஆற்றலை அறிந்தாயில்லை. இதனால் நீ வேடர் குலத்தில் பிறப்பாயாக" என மகனை அவர் சபித்தார்.

மகன் பதைபதைத்துப் பணிந்து பிழை பொறுக்குமாறு வேண்டினான். முனிவர் கருணைபுரிந்து, "மகனே! அஞ்சற்க. நீ இதே கங்கா தீரத்தில் வேடர்கட்கு அரசனாக பிறப்பாய். முருகன் நாமங்களில் ஒன்றாகிய "குகன்" என்ற பெயரைத் தாங்கி, அன்புருவாக நிற்பாய். ஸ்ரீ ராமருக்கு நண்பனாய் வாழ்ந்து முடிவில் முருகபதம் பெறுவாய்" என்று அருள் புரிந்தார்.

அம்முனிவர் மகன் குகனாகப் பிறந்தான். உத்தமனாக நின்று ஸ்ரீ ராமபிரானுடைய நட்பைப் பெற்று, இறுதியில் கந்தலோகம் பெற்றான். ஆதலால், "முருகா" என்ற திருமந்திரம் சகல வினைகளையும் போக்கும். "முருகா" என்று ஒருமுறை கூறியவுடன் முருகம்மையாருக்கு கணவன் வெட்டிய கரமலர் வளர்ந்தது.

**'முருகா எனவோர் தரமோதடியார்**
**முடிமேல் இணைதாள் அருள்வோனே'**

என்று அருணகிரிநாதர் பாடி இதன் பெருமையை உணர்த்துகின்றார்.

**'முருகா எனவுனை ஓதுந்தவத்தினர் மூதுலகில்**
**அருகாத செல்வம் அடைவர், வியாதியடைந்து நையார்**
**ஒருகாலமுந் துன்பம் எய்தார், பரகதி உற்றிடுவார்**
**பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே'**

என்று சிதம்பர சுவாமிகள் "திருப்போரூர்ச் சந்நிதி" முறையில் பாடியிருக்கின்றார்.

ஆதலால் கண்கண்ட தெய்வமாம் கலியுகவரதன் என்னப்பன், மூவர் தேவர் தொழும் முழுமுதற் கடவுளின் திருவடியைச் சிந்தித்து, வந்தித்து, முருகா என்ற இனிய கனியமுதம் அன்ன நாமத்தை உள்ளம் உருகி, ஓதி, அன்பர்கள் பெற்ற பிறவியின் பயனைப் பெற்று, இனிப் பிறவாப் பெற்றியைப் பெறுவார்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவாசற் கோபுரத்திற்கு நிலையம் குறித்தல்






## தலைவாசற் கோபுரத்திற்கு அத்திவாரமிடல்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








தலைவாசற் கோபுர கலசஸ்தாபனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org